www.padippakam.com

# சுமைகள்

சுமைகள் – 11 கார்த்திகை,மார்கழி – 1994 Sumaihal Nr. 11, november/desember 1994, Tromsø, Norge Løssalg kr. 10,-

# ஐரோப்பா ஒன்றியத்திற்கு நோர்வே மக்கள் எதிர்ப்பு!

*நோர்வே மக்களின் தாய் நாட்டு நேசமும், உலக மக்கள் நட்பும் ஐரோப்பா முதலாளிகள் கூட்டான ஐரோப்பிய ஒன்றியத்தில் நோர்வே இணைவதை தடுத்து நிறுத்தியுள்ளது.*


நோர்வே ஐரோப்பா ஒன்றியத்தில் இணைவதற்காக நடத்தப்பட்ட சர்வசன வாக்கெடுப்பில் 52.4மூ மக்கள் இணைவிற்கு எதிராக வாக்களித்துள்ளனர். பலகோடி குரோணர்கள் முதலிட்டு நோர்வே அரசு, முதலாளிகள் முண்ணனி (N.H.O) ஐரோப்பி ஒன்றியத் தலைமை ஆகியன நோர்வே மக்களை ஐரோப்பிய ஒன்றியத்தில் திணிக்க முற்பட்டனர். மூன்றாம் உலக நாடுகளைச் சுறண்டி திண்று கொழுத்த மேற்கைரோப்பிய நாடுகள், இன்று கூட்டாகக் கூடி உலகைச் சுறண்டுவதன் மூலம் மேலும் தமது சொகுசு வாழ்கையையும் பணக் கட்டுக்களையும், சொத்துக்களையும் பெருக்க மஸ்ரிச் (MAASTRICHT) ஒப்பந்தம் மூலம் திட்டம் வகுத்துள்ளன

12 நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியம் கடந்த இருவருடங்களின் முன் சுவிஸ், ஒஸ்ரியா மற்றும் ஸ்கன்டிநோவிய நாடுகளையும் தமது திருடர் கூட்டில் இணைக்க முயன்றது. இதில் சுவிஸ் ஆரம்பத்திலேயே கூட்டில் இணைய மறுத்துவிட்டது. மீதமானவையான ஒஸ்திரியா, பின்லாந்து, சுவீடன், நோர்வே நாட்டு அரசுகள் இணைவதற்கு விண்ணப்பித்தன. இந்த வருடத்தில் நடந்து முடிந்த சர்வசன வாக்கொடுப்புகளின் பின் முறையே ஒஸ்திரியா, பின்லாந்து, சுவீடன் நாடுகள் ஐரோப்பா ஒன்றியத்தில் இணைந்து கொண்டன. நோர்வேயில் நடந்த வாக்கொடுப்பில் இணைவிற்கு எதிராக வாக்களித்து மக்கள் இணைவை தடுத்து நிறுத்தி உள்ளனர். இணைவிற்கு சார்பாக அரச இயந்திரமும் முதலாளிகள் கூட்டும் நடத்திய அதிரடிப் பிரச்சாரத்தை தொழிலாளர், மீனவர்கள், விவசாயிகளை உள்ளடக்கிய மக்கள் முண்ணனி முறியடித்தே, ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எதிரான இச்சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

*நோர்வே மக்களின் எதிர்ப்பின் அடித்தளம்:-*

உலகின் அனைத்து இயற்கை வளங்களையும் தன்னகத்தே கொண்ட நோர்வே மீன்பிடி, எண்ணெய், வாயு ஏற்றுமதியிலும் மேற்கு ஐரோப்பாவில் முன்னணியில் திகழ்கின்றது. ஐரோப்பி ஒன்றிணைவானது நோர்வேயின் இயற்கை வளங்களையும் மற்றும் மீன்பிடி விவசாயத்தையும் பாரிய அளவில் பாதிப்பதுடன், இயற்கை வளங்கள் மீதான தேசிய உரிமையையும் ஐரோப்பா ஒன்றியத்துதிற்கு தாரைவார்த்து கொடுக்க வழிவகுக்கும். மேலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, மூன்றாம் உலக நாட்டு மக்கள் மீதான ஆதரவு, யுத்த எதிர்ப்பு மற்றும் உலக சமாதான விருப்பு என்பன பெரும்பான்மை நோர்வேஜிய மக்களின் வாழ்வியலுடன் கலந்த குணாம்சங்களாகும். ஐரோப்பிய ஒன்றியமானது மேற்கூறிய அனைத்து விடயங்களுக்கும் நேர் எதிரானது. உலகின் படுபயங்கரமான கொலணித்துவ நாடுகளான ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் வரலாற்றில் முதலாம் இரண்டாம் உலக யுத்தங்களை தொடங்கி பல லட்சம் மக்களை கொன்று குவித்தவை

இவ்வாறாக நோர்வே உழைக்கும் மக்களின் தாய் நாட்டு நேசமும், உலக மக்கள் நட்பும் ஐரோப்பா முதலாளிகள் கூட்டான ஐரோப்பிய ஒன்றியத்தில் நோர்வே இணைவதை தடுத்து நிறுத்தியுள்ளது. இம்மக்களின் வெற்றியானது ஐரோப்பிய ஒன்றியத்தினுள் தம் எதிர்ப்பை தெரிவித்துவரும் உழைக்கும் மக்களுக்கு உற்சாகத்தை வழங்குவதுடன் ஐரோப்பிய ஒன்றிய தலைமையின் முகத்தில் கரிபூசியதுமல்லாமல் எதிர்கால சாணியடிப்பிற்கும் வழிவகுத்துள்ளது.




காந்தியின் சாதிவெறி..
கூத்தாடுவதும் குண்டி..
ஒஸ்லோவில் தமிழர்கள்..

*துவக்கு...
*நோபல் பரிசு..
*பிரான்ஸின் ஒடுக்குமுறை-
*காமினி படுகொலை...
*சனத்தொகை பெருக்கம்..

உள்ளே..!



# மக்களின் விருப்பு சமாதானமே

## *சமாதானப் பேச்சுவார்த்தை தொடரப்பட வேண்டும்*

சந்திரிக்கா பிரதமர் ஆனபின்பு பொருளாதாரத் தளர்வு, இனப்பிரச்சனையை தீர்க்கும் முகமாக அதிகாரிகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை அத்துடன் சில உணவுப் பொருட்களின் விலை இறக்கம் பத்திரிகை, தொடர்பு சாதனங்களுக்கு ஓரளவு சுதந்திரமும், தொடர்ச்சியான புதைகுழி தோண்டல் (யூ.என்.பியால் புதைக்கப்பட்டவர்கள்) என்பவை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை ஜனாதிபதி தேர்தலுக்கான நியமனமும், காமினியின் படுகொலையும் இதன் எதிரொளியாக சந்திரிக்கா பேச்சுவார்த்தையை உடனடியாக இடை நிறுத்தியதுடன். அதேவேளை சமாதானத்திற்கான முயற்சி தொடரும் என அறிவித்தார். பொதுசன ஐக்கிய முண்ணனிக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து தேர்தலில் நடுநிலை வகிப்பதாகக் கூறிக் கொண்ட தொண்டமான் அமைச்சரானார். மலையக மக்கள் தேர்தலில் சந்திரிக்காவிற்கு வாக்களிப்பார்கள் என பயந்துடன், இதன் மூலம் தன்னுடைய செல்வாக்கு இழப்பினையும் தனது பொய் வேசம் உலகிற்கு தெரிந்துவிடும் என்றதால் இவர் குத்துக்கரணம் அடித்தார். இவர் யார் ஆட்சியில் இருந்தாலும் அமைச்சர் என்ற பெருமைய்யை அடைவார். ரெலோவானது ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்ததுடன், தொண்டமானைப் போல் குத்துக்கரணம் அடித்த மற்றய இயக்கங்களான பிலொட், ஈபிடிபி, ஈரோஸ் (சங்கர் பிரிவு) என்பனவும் ஈபிஆர்எல்எப், கூட்டணி மற்றும்

*தொடர், பக் 8.......*

SUMAIHAL, POSTBOKS 415, 9001 TROMSØ, NORWAY

www.padippakam.com



# சுமைகள்

சுமைகள் நீண்ட நாடட்களின் பின் மீண்டும் உங்கள் கரங்களுக்கு. இன்று பல நாடுகளில் பல இன மக்கள் ஒடுக்கப்பட்டு மனிதனின் அடிப்படைத் தேவைகளான உவை, உடை, உறையுள் என்பன கூட இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு வாழும் மக்களை நாம் எந்த வகையில் நினைத்துப் பார்க்கின்றோம். இவர்கள் தொடர்ந்தும் இப்படித்தான் வாழ வேண்டுமா? என்ற கேள்வியை உங்கள் முன் வைக்கும் அதேவேளை எமது நாட்டிலும் பலர் இதே நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் தமிழ் மக்களை மாத்திரம் கருத்தில் கொண்டு உலகம் புராகவும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிவந்த வண்ணம் உள்ளது. ஆனால் சுமைகளோ தனிமையில் தமிழர்களின் நலனை மாத்திரம் கணக்கில் கொள்ளாது எங்கள் சகோதர இனங்களான மற்றைய மூன்று இனத்தையும் கருத்தில் கொண்டு தனது பணியைத் தொடர உள்ளது. எம்மால் இயன்றவரை பத்திரிகையை தொடர்ந்து நடத்த உங்களிடம் எதிர்பார்ப்பது, பத்திரிகைக்கான ஆக்கங்களே இதை எமக்கு எழுதியனுப்பும் வேளையில் அவ்வாக்கமானது இன்றைய உலகின் நிலையை கனக்கில் கொண்டும், ஆக்கங்கள் அமைந்திருப்பது அவசியமாகும். உங்கள் எல்லோரிடம் இருந்தும் பொருளாதார ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். இத்துடன் இச்சஞ்சிகையை உங்களுக்குத் தெரிந்த நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களின் முகவரிகளையும் (எங்கிருப்பினும் பறவாயில்லை அதாவது நோர்வேயில் இல்லாமல் இருக்கலாம்) எமக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு உங்கள் எல்லோரின் ஒத்துழைப்பும் அவசியம். இதை மறுக்காது செய்வீர்கள் என நாம் எதிர் பார்க்கிறோம

அன்புடன்
சுமைகள் வெளியீட்டுக் குழு

வங்கி கணக்கு இலக்கம்
8245 40 59545
Sparebanken Nor

தபால் கணக்கு இலக்கம்
0826 08 68293

சந்தா வருடம் 60 குரோணர்
வெளிநாடு 10 us $
முகவரி
post boks 415
9001 Tromsø
Norway

# இந்தியாவின் 'தேசத்தந்தை' மகாத்மா காந்தியின் சாதி வெறி

தோழரும், எழுத்தாளருமான, கே. டானியல் அவர்கள் தனது பஞ்சமர் நாவலின் முன்னுரையில் கூறுவது போல் 'நிலவுடமை ஆதிக்கத்தின் மேல் கட்டப்பட்ட இந்த சாதி முறையை அகற்றுதல், அதைப் பாதுகாத்து நிற்க்கும் அரசு இயந்திரத்தை மாற்றுதல், சகல ஆதிபத்திய சிந்தனைகளையும் சாடி அழித்தல் ஆகியவைகளுக்கு இலக்கியத்தை பயன்படுத்தல்' என்ற பொதுவான உலக வியாபகமாகி நிற்கும் போக்கை மறுத்து நிற்பவர்கள்', மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும், இலங்கையிலும் ஒடுக்கும் வர்க்கத்திற்கு துணை போவர்களாலுமே, இலங்கையில் நடந்த சாதி ஒடுக்கு முறைக் கெதிரான போராட்ட வரலாறுகள் ஏழுதப்படுகிறது. இந்தியாவில் இதே நிலைதான் சுதந்திரத்தின் பிற்பாடு நடைபெற்றது.

நோர்வே "வர்க்கப்போர்" **(KLASSEKAMPEN)** பத்திரிகையாளரான **REIDUN ASTRID NYDAL** ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்ட வரலாறு எப்படி, யாரால் இருட்டடிப்பு செய்யப்பட்டது என்பதை, இந்திய தேசிய போராட்ட வீரரும், ஒடுக்கப்பட்டவர்களின் அரசியல் பிரதிநிதிகளின் ஒருவருமான அம்பேத்காரின் துணைவியார் சவிதா அம்மையாருடன் உரையாடுவதன் மூலம் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

–சுமைகள்–

'இந்திய வரலாறு உயர்சாதி பிராமணிகளாலேயே எழுதப்பட்டது. அதனாலேயே, இந்திய விடுதலையும், இந்தியாவின் ஒடுக்கப்பட்ட 'சாதி' மக்களின் விடுதலையும் காந்தியின் பிரயாசையினால் பெறப்பட்டதென்று இன்று பரவலாக நம்பப்படுகின்றது. இது உண்மையல்ல, உண்மைக்கு மாறானது. இந்திய விடுதலைக்கும் ஒடுக்கப்பட்ட சாதி மக்களின் விடுதலைக்காகவும் போராடியவர்கள் பீமாராவ் அம்பேத்காரும், இன்னும்பல நூற்றுக்கணக்கான வரலாற்றில் மறைக்கப் பட்டவர்களுமே. .........' இவ்வாறு என்னுடன் உரையாடும் போது தெரிவித்தார் அம்பேத்காரின் துணைவி சவிதா (SAVITHA) அம்பேத்கார்.

அம்பேத்கார் யாரென்று மேற்குலகுக்கு மட்டுமல்ல ஆசிய நாட்டினர் பலருக்குமே தெரியாது. ஆனால் இந்தியாவில் பல நகரங்கள், கிராமங்கள் எங்கும் அவர் சிலை காணப்படுகின்றது. நான் சவிதா அவர்களை உத்தரப்பிரதேஸ் மாநிலத்திலுள்ள (BENARES) பெனாறஸ் என்ற நகரில் நடந்த 'மதங்களும் மனித உரிமையும்' என்ற தலைப்பிலான சர்வதேச மகாநாட்டில் தற்செயலாகச் சந்தித்தேன்.

எழுபது வயதுகள் தாண்டியும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், பெண்கள் சமவுரிமைக்காகவும் போராடிவரும் இவ் அம்மையாரை சந்தித்ததும் உரையாடியதும் எனக்குள் எழிர்ச்சியையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது. சபிதா அவர்களை சந்திப்பதற்க்கு சில நாட்களுக்கு முன்புதான் நான் "AMBEDKAR'S LIEF AND STRUGGLE FOR JUSTICE" (அம்பேத்கார் வாழ்வும், நியாயத்திற்கான அவர் போராட்டமும்) என்ற நூலை வாசித்திருந்தேன். இந்நூலை வாசித்த போதும், சபிதா அவர்களுடன் உரையாடிய போதும் எனக்குள் எழுந்த கேள்வி இந்தியாவின் விடுதலைக்கும், மற்றும் சமூக விடுதலைப் போரிலும் முன்னின்று போராடிய அம்பேத்கார் போன்றவர்கள் வெளியுலகிற்க்கு எப்படி மறைக்கப் பட்டார்கள் என்பதுவே? கேள்விக்கணை தொடுத்தது தான் தாமதம், பதில் அம்மையாரிடம் இருந்து அருவிபோல் வெளிவந்தது.

'இந்திய வரலாறு, மேல்சாதியினரான காந்தி, நேரு போன்றோராலும், மற்றும் அவர்களின் விசுவாசிகளான பிராமணிய அறிவு ஜீவிகளாலேயுமே எழுதப்பட்டது. காந்தியும், நேருவும் இந்துமத வெறியர்கள். சாதி எதிர்ப்புப் போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் கெதிராக செயற்பட்டவர்கள். இந்தியாவை வெள்ளையர்கள் விட்டுச் செல்லும் போது இவர்களிடத்தே ஆட்சியை ஒப்படைத்தார்கள். நேரு தலைமையிலான ஆட்சி தமக்குச் சாதகமாக வரலாற்ரை எழுதிக் கொண்டது.

1919ம் ஆண்டு அம்பேத்கார் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக தேசிய அளவில் குரல் கொடுக்கும் போராளியாக தன்னை அரசியலில் வெளிப்படுத்தினார். 1931இல் 'ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தனித்துவமான தேர்தலும், அரசியல் அதிகாரமும் தேவை' என்ற அரசியல் தீர்மானத்தை முன் மொழிந்து, அதற்கான அனைத்துவித போராட்ட நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார். காந்தியும், அவரோடு சேர்ந்த மேல்சாதி வெறியர்களும் இத்தீர்மானத்தை கடுமையாக எதிர்த்தனர். இது மட்டுமல்லாது இந்து மதத்தினுள் பிரிவினையை தூண்ட வேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்ததுடன், இத்தீர்மானம் நிறைவேற்றப்படுமானால் தான் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன் என்ற 'மாகாத்மா' காந்தி தனது வழமையான மிரட்டல் ஆய்தத்தைப் பயன்படுத்தினார். இதன் விளைவாக அம்பேத்கார் தீர்மானத்தை கைவிட வேண்டியதாயிற்று. இதற்கு காந்தியின் மிரட்டல் மாத்திரமன்று, தேசிய விடுதலைப் போராட்டம் பாதிக்கப்படுமோ என்ற பலரின் அபிப்பிராயமும் காரணமெனலாம். சாதி ஒடக்குமுறை இன்னும் வலுவாகத் தொடர்ந்தது. 1935 இல் திரும்பவும் புதிய தீர்மானம் கொணர்ந்ததுடன், அம்பேத்கார், இந்து மதத்தில் இருந்து அனைத்து ஒடுக்கப் பட்டவர்களையும் விலகும்படி கேட்டுக் கொண்டார். பலர் சீக்கிய மதத்திலும், புத்த மதத்திலும் சேர்ந்து கொண்டனர். இருந்தும் பயனளிக்கவில்லை. ஒடுக்கு முறை அம்மதத் தலைவர்களினாலும், அம்மதம் தழுவிய உயர் சாதியினராலும் இம் மக்கள் மீது பிரயோகிக்கப்பட்டது. பலர் திரும்பவும் இந்து மதத்திற்க்கு திரும்பினர். இந்தியா சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் பிராமணிகளுக்கும் மற்றும் உயர் சாதியினருக்குமென்றிருந்த வாக்குரிமையை, அம்பேத்காரும், மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் பிரதி நிதிகளும் காங்கிரஸ் தலைமையுடன் போராடி அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக் கொடுத்தனர். மேலும் அம்பேத்கார் நீதி அமைச்சராக இருந்த காலத்தில் பல சட்டங்களை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் ஏற்படுத்தினார். இருந்தும் என்ன ஒரே நிலைதான் இன்றும். —

நான் கேட்ட கேள்விகள் அனைத்திற்க்கும் விளக்கமாக பதில் அளித்த அம்மையார், தன்னைப்பற்றி கூறுகையில் தான் பிராமண குலத்தில் இருந்து வந்ததாகவும், தன் மாணவப் பருவகாலத்தில், பிராமணிய ஒடுக்கு முறைக்கு எதிராகவும், வெள்ளையர் ஆட்சிக்கு எதிராகவும் போராடிய அம்பேத்கார் சிந்தனையில் கவரப்பட்டு, அவர் அணியில் சேர்ந்து பிற்பாடு அவரைத் திருமணம் புரிந்ததாகக் கூறினார்.

'நான் பிராமணிய சமூகத்தில் இருந்து வந்தாலும், என்னை நான் 'தலித்' (ஒடுக்கப்பட்ட) துக்களில் ஒருத்தியாகவே உணர்கிறேன். இப்போதும் எமது உரிமைக்காக போராடிக்கொண்டே இருக்கிறேன். ............' என்று தன்னை ஒடுக்கப்பட்டவர்களில் ஒருத்தியாக உணரும் இவரிடம் 'தலித்' என்பதன் அர்த்தத்தையும் அதன் வரலாற்று பின்னணி பற்றியும் வினாவினேன்.

'கீழ்' சாதியினரையும், மற்றும் பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்டு சமூக அங்கீகாரமில்லாதவர்களையும் காந்தி ஹரிஜனங்கள் என்று பெயரிட்டு அழைத்தான். 'ஹரி' இந்துக் கடவுள்களில் ஒருவர். அந்த ஹரியின் புதல்வர்களாக இந்த ஒடுக்கப் பட்டவர்களை அழைப்பதன் மூலம் இந்து மத சாதித்துவத்துள் இம் மக்களுக்கு ஓர் அந்தஸ்தை வழங்க முயற்சித்தார். ஹரியின் பெயராலும், இந்து மதத்தின் சாதி அமைப்பின் பெயராலும் தலித்துக்கள் மீது நிகழ்த்தப்படும் ஒடுக்கு முறையை மூடிமறைக்க முயன்றதுடன் ஒருவகை போலி சமரசக் கருத்தையும் பரப்ப முயன்றார். ஒடுக்கப்பட்ட மக்கள் தலைவர்கள், ஒடுக்கப்பட்டவர்களை 'தலித்'துக்கள் என்று அழைப்பதே சரியானது எனக் கருதினர். "தலித்" என்ற சமஸ்கிருத சொலின் அர்த்தம் 'ஒடுக்கப்பட்டவர்கள்' என்பதாகும். இச் சொல் இம் மக்களின் உண்மை நிலையை வெளிப்படுத்துவதுடன், காந்தியினதும், பிராமணியத்தினதும் சமரசத்தை அம்பலப் படுத்துகின்றது. ......... என்னதான் இந்திய அரசியற் சட்டத்தில் எல்லா ஜாதியினரும் சரிநிகர் சமானமாக மதிக்கப்படல் வேண்டும் என்று கூறப்பட்டாலும் இன்னும் ஒடுக்கு முறை தொடர்கிறது. தலித்துக்கள் ஒடுக்கப்பட்டவர்கள். பெரிய அளவில் இல்லாவிட்டாலும் சிறிய மாற்றம் கூட இன்னும் இங்கு நடைபெறவில்லையே. உதாரணமாக தலித்துக்கள் பொதுக் கிணறுகளில் தண்ணீர் அள்ளுதல் சாதி வெறி கொண்டவர்களால் தடுக்கப்படுகிறது.

.........

நீண்ட நேர சம்பாசனையை முடித்துக் கொண்டு, சவிதாவிடம் இருந்து விடைபெற்றேன் ஆனால் இன்னும் அவரின் உருவமும், செயற்திறன் வாய்ந்த கருத்துக்களும் என்னுள் நிழலாடியபடி. வரலாறுகளும், சமூகப் போரட்டம் பற்றி உண்மைகளும் ஆளும் வர்க்கத்தால் உலகெங்கும் இருட்டடிப்புச் செய்யப்பட்டும், தமது நலனுக்கு தேவைப்பட்ட படி பாவிக்கப்பட்ட வண்ணமே இருந்து வருகின்றது.

இந்நிலை இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்கும் நிகழ்கிறது. ஐரோப்பிய கைக்கூலியான காந்தியின் வரலாறு உலகெங்கும் புனிதப்படுத்தப் பட்டு பரவல் படுத்தப்படுவது ஒன்றும் ஆச்சரியப்படக் கூடியதொன்றல்ல. ஆனால் ஒடுக்கப்பட்டவர்கள் தம் வரலாற்று வேர்களை பற்றி நின்று ஒடுக்கு முறைக்கு எதிராகப் போரிட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# காமினியின் கொலைக்கு அனுதாபமா?

சுமார் ஒன்றரை வருடங்களின் பின் மீண்டும் தற்கொலை படையின் தாக்குதலில் முன்னாள் ஜனநாயக ஐக்கிய தேசிய முண்ணனியின் தலைவர்களான காமினி திசாநாயக்க, பிரேமச்சந்திரா ஆகியோருடன் மல்லிமாராட்சி, டொக்டர் காமினி விஜேசேகரா, கிரிஸ்ரி பெரேரா ஆகியோருடன் 52 பேர் கொல்லப்பட்டனர். இக் கொலையை அடுத்து திசாநாயக்காவின் மனைவி சிறிமா திசாநாயக்கா ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுதுடன் தற்போதைய எதிர்கட்சி தலைவரான றணில் விக்கிரமசிங்க ஓரங்கட்டப்பட்டார்.

இந்தப் படுகொலையின் மூலம் மக்களால் தூக்கியெறியப்பட வேண்டிய சக்திகள் மக்கள் முன்னிலையில் தியாகிகளாகி விட்டனர். இப்படிப்பட்ட கொலைகாரர்களை அழிக்கும் பொறுப்பை ஒரு குறிப்பிட்ட குழு அல்லது தனிமனிதன் கையில் எடுத்துக் கொண்டு செயற்படுவதன் மூலம் அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்த்துக் கொள்ள முடியும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. காரணம் எம்சமூகத்தில் அல்லது உலக சமூகத்தில் இப்படிப்பட்ட கொலைகளின் மூலம் மக்களின் மனதை வெல்ல முடியும் என்பது மிகவும் கடினமானதாகும். மாறாக இறந்த மனிதன் எப்படியான கொடிய அரக்கனாக இருந்தாலும் அவன் இறந்த பின்பு அவனை ஒரு புனிதராகவே கணிக்கின்ற நிலை ஆண்டாண்டு காலமாக இருந்து கொண்டே வருகின்றது. தற்பொது மேற்குலகம் கூறிவருகின்ற ஜனநாயகம் (வலுத்தவன் வாழ்வான் என்ற கோட்பாடு) என்ற கழுதை உலகை ஆளுமை செய்கின்றது. இப்படிப்பட்ட நிலையில் ஒரு கொடிய அரக்கனை சமூகத்தில் இருந்து அல்லது அதிகாரத்தில் இருந்து அகற்ற வேண்டுமாயின் மக்கள் அப்பொறுப்பினை எடுத்தே ஆகவேண்டும். ஏனெனில் ஆண்டாண்டு காலமாக தம்மிடமே உள்ள சிந்தனை ஓட்டமும் அரசியல் உணர்வற்ற தன்மை இங்கு மேலோங்கி உள்ளது. இவற்றை அகற்றி அரசியல் உணர்வு பெற்ற சமூகத்தினாலேயே சரியான தீர்வைக் கண்டடைய முடியும். மாறாக அதிகாரத்தை தனிநபர் எடுத்துக் கொண்டு தீர்ப்பழிப்பதன் மூலம் சந்திக்குச் சந்தி சிலைகளையும் அனுதாபத்தின் மூலம் அவரைப் போன்ற இன்னோரு கொடியவரை அல்லது மனைவியை அதிகாரத்தில் தொடர்ந்தும் இருத்தவே வழிசமைக்கும்.

எம்வாழ்நாளில் இந்த உலக அரங்கில் பல கொடிய மனிதர்களை அகற்றி, அதற்கு மாறாக ஒரு புதிய முகத்தை ஆட்சியில் அமர்த்துவது சுரண்டிக் கொண்டிருப்பவர்களின் தந்திரோபாயமாகும். இந்த வகையில் பிலிப்பைனில் பேடினன்ட் மார்க்கோசை அமெரிக்க ஏகாதிபத்தியமானது பின்கதவால் அவரைத் தப்பவைத்து புதிய முகமான அக்னோவை ஆட்சியில் அமர்த்தியது. இதேபோல் பிரித்தானியாவில் மாக்கிரட் தட்சரை விலக்கி புதிய தலைவராக ஜோன் மேயரை பதவியில் இருத்தினர். இவ் உதாரணங்கள் எமக்குக் கற்பிப்பது என்னவெனில் கொந்தளித்துக் கொண்டிருக்கின்ற நிலைமையை தணிப்பதற்காக மேற்கொள்ளப்படும் தந்திரோபாயமே இவையாகும். இவைகள் மக்களின் சிந்தனையை தளர்த்தி ஒரு உறங்கு நிலையை உருவாக்கவே இவைகள் பயன்படுத்தப்படுகின்றன.

அதேவேளை இவர்களின் இழப்பையிட்டு சந்தோசப்படவில்லை, என்பதற்காக இக்கொலைகாரர்களுக்கு அனுதாபம் தெரிவிக்க நாம் தயாராகவில்லை. இவர்களின் மறைவிற்கு அனுதாபம் தெரிவிப்பது என்பது அடக்கி ஒடுக்கப்படும் மக்களிற்கு இழைக்கப்படும் துரோகமாகக் கருதுகிறோம். அவர்களை மக்கள் முன் அம்பலப் படுத்துவதன் மூலம், மக்களை அவர்களை எதிரான போராட்டத்திற்கு தலைமை தாங்க வலியுறுத்துவதே எம்முன்னிருக்கின்ற பிரதான கடமையாகும். இவ்வாறு அணிதிரட்டப்பட்ட மக்களைக் கொண்டே கொல்லப்பட வேண்டும்.

# சனத்தொகை பெருக்க மாநாடு குறூ உரை

இன்று மேற்குலக நாடுகள் எல்லா முக்கிய விடையமாகக் கருதிக் கொண்டிருக்கும் செயல் திட்டம் உலகச் சனத்தொகையை எவ்வாறு கட்டுப்ப்படுத்துவது என்பதே. இதன் அடிப்படையில் அண்மையில் எகிப்தின் தலைநகர் கைரோவில் சர்வதேச மாநாடு கூட்டினர். இதற்கு பலநாட்டின் பிரதிநிதிகளும் பங்கு பற்றினர்.

இவ் மாநாட்டில் பங்கு பற்றிய நோர்வே நாட்டுப் பிரதமர் டொக்டர் குறூ காலம் புறுண்லாண்ட் தனது உரையில் கருக்கலைப்பை அனைத்து நாடுகளிலும் சட்டரீதியாக ஆக்கப்பட வேண்டும் என்றும் இதற்கு தடையாக இஸ்லாமிய அடிப்படை அரசுகளும், வத்திக்கான் தலைமையும் (பாப்பாண்டவர்) இதற்கு தடையாக உள்ளதாகக் கூறினார். குறூவின் பேச்சானது உலகில் எல்லோரும் முணுமுணுக்கும் அளவிற்கு சென்றுவிட்டது. இவரின் உரையை உற்றுநோக்கினால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், ஐரோப்பிய ஒன்றியத்தின் குரலை தனது எஜமான்கள் சார்பாக ஒப்பிவித்துள்ளார் எனலாம்.

இவர் கூறுவது போல் கருத்தடை சனப்பெருக்கத்தை குறைத்துவிடுமா? சாதாரணமாக எமது நாடுகளில் எதிர் நோக்கும் பிரச்சினைகளை எடுத்துக் கொள்வோம், எமது நாடுகளில் சுகாதார வசதி அனைத்து மக்களுக்கும் சரிசமனாக கிடைப்பதில்லை. குறிப்பாக ஏழை எழியவர்களுக்கு கிடைப்பதில்லை. ஏன் இவர்களிடம் பொருளாதாரம் இல்லை. இவர்கள் வேலை அற்றோராகவும், நாட் கூலி வேலை செய்பவர்கயாகவும், வறுமையில் வாடுபவர்கயாகவும் இருப்பதனால் தமது சுகாதாரத்தினை பாதுகாத்துக் கொள்ள முடியாது. அப்படித்தான் கருவைக் கலைத்தாலும் உடலைப் பராமரிப்பதற்கு நல்ல சத்துள்ள உணவு தேவை இதற்கு என்ன செய்வது?

ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகளைப் பெற்ற பின்பு, தற்போது இந்தியாவில் செய்வது போல் கருத்தடை செய்தால் சிறிது காலத்தில் இருக்கும் பிள்ளைகள் இறந்துவிட்டால் என்ன செய்வது? இப்பிரச்சனை வசதிபடைத்தவர்களுக்காக ஏற்படுமா? தமது வயோதிப காலத்தில் தமது பிள்ளைகளை நம்பியே வாழும் ஏழை சனங்கள் என்ன செய்வது? இதற்கு என்ன காரணம்?

இன்னும் ஒரு பகுதியினரும் தமது கருவை கலைப்பதற்கு தயாராக உள்ளனர். ஏன் தமக்கு ஆண்பிள்ளை வேண்டும், பெண் பிள்ளை என்றால் சீதனம் கோடுக்க வேண்டும். ஆண்பிள்ளையோ தமக்கு இறுதியில் கொள்ளி வைக்க வேண்டும் என தந்தையரின் விருப்பம். இவை உருவாகக் காரணம் என்ன? ஆண்டாண்டு காலமாக ஏழை சனங்களிடையே இருந்துவரும் மூடப்பழக்க வழக்கங்களே காரணம்.



மேற் கேட்கப்பட்ட கேள்விகளில் இருந்து தெரிவது என்ன? அனைத்துப் பிரச்சனைகளுக்கும் காரணம் பொருளாதாரமே. ஒரு பெண்ணிற்கு கருக்கலைக்க உரிமை உண்டா? இல்லையா? என்புது இங்கு பிரச்சனை இல்லை. உண்மையாண பிரச்சனையைப் பற்றிக் கதைக்காமல் மாறாக தமது நலனின் அடிப்படையில் இருந்து அமைந்ததே இவரின் உரையாகும். மேற்குநாடுகளை எடுத்துக்கொண்டால் இங்கே பிள்ளைப் பெறுவதற்கும், குழந்தைக்கு தேவையான உபகரணங்களை வாங்குவதற்கு தேவையான பணத்தையும் கொடுத்து ஊக்குவிக்கின்றனர் (இது மக்களின் அடிப்படை உரிமை தான்). அதே வேளை எமது நாடுகளில் மாத்திரம் பெருகும் சனத்தொகை பற்றி இவர்கள் ஏன் அதிகமாக அக்கறை காட்டுகின்றனர். (ஆடுநனைகிறது என்று ஓநாய் அழுததாம்) அதேவேளை உலகத்தில் காணப்படும் பங்சம், பட்டினி, பிணிகளுக்கு சனத்தொகை பெருக்கம்தான் காரணம் என இவர்கள் நினைக்கிறார்கள் போலும்.

சனத்தோகையைக் குறைக்க வோண்டுமானால் சமூகத்தில் உள்ள பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும். அதாவது வறுமையை ஒழிக்க வேண்டுமானால், சமூகத்தில் ஊறியுள்ள மூடப்பழக்க வழக்கங்களை இல்லாது ஒழிக்க வேண்டுமானால், இருக்கின்ற சமூக அமைப்பை மாற்ற வேண்டும். சமூக மாற்றத்திற்காக பாடுபடும் பல போராளிகள் மூன்றாம்உலக நாடுகளில் போராடிக் கொண்டிருக்கிண்றனர். இவர்கள் எவருக்காவது இந்த அரசுகள் உதவி செய்கின்றனவா? (எதிர் பார்ப்பது மடமைத் தனம்) இல்லை. அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு யுத்ததளவாடங்களை கொடுத்து உதவுகின்றனர். இவருடைய பேச்சில் மதிமயங்க மூன்றாம் உலக மக்கள் என்ன ஏமாளிகளா?

படிப்பகம்

www.padippakam.com



# கூத்தாடுவதும் குண்டி நெளிப்பதுவும்,.........................!

## மேற்குலக 'புத்திசீவிகள்'மீது ஓர்பார்வை.

-- அ. மனோகரன் --

ஐரோப்பா-கனடா ஆகிய நாடுகளில் பலர் வெவ்வேறு வடிவங்களில் இருந்து செயற்படுகின்றனர். இவர்களின் செயற்பாடுகள் பற்றி இன்று நாம் ஆராய வேண்டியுள்ளது. இவர்கள் அனைவரும் மக்கள் நலனே தான் முன் நிபந்தனை ஆனது என செயற்படுகிறார்களா? அல்லது தமது நலனை (இருப்பை) மையமாக கொண்டு தான் செயற்படுகிறார்களா என நாம் எல்லோரும் கேள்வி எழுப்ப வேண்டிய தேவையை அடைந்துள்ளோம். இவற்றின் அடிப்படையில் இருந்தே இக்கட்டுரையை வரைகின்றேன்.

நண்பர் ஒருவர் ஐரோப்பாவில் வெளிவந்த பத்திரிகையை வாசித்து விட்டு கூறினார் அதில் இயக்கம் ஒன்று எதிரி யார்? நண்பன் யார்? என இனங்காணத் தவறிவிட்டார்கள் - தெரியவில்லை என உள்ளதாக, ஆனால் அது பிழை காரணம் அவர்களுக்கு தமது நண்பர்கள் யார், எதிரி யார் என நன்றாகத் தெரியும். ஆனால் மக்கள் தான் ஏமாறுகிறார்கள் முற்போக்கு, புரட்சி, மார்க்சீயம் என்ற சொற்றொடர்களை பாவிப்பவர்களிடம். இந்த நிலை தான் மாறவேண்டும். இன்று மக்கள் சோசலிசம் என்றால் ஸ்ராலினுக்குப் பிந்திய சோவியத்தையும் (தவறுகள் இருந்தது அவை விமர்சனத்திற்கு உரியவை) மாவோவிற்கு பிந்திய சீனாவையும் தான். உதாரணம் காட்டுகிறார்கள். இப்படியாக மார்க்சியம் மக்களிடத்தில் அந்நியப்பட்டிருக்கும் போது முற்போக்கு சுலோகத்தை தூக்குபவர்களிடமும் ஏமாந்து விரக்திக்கும் சென்றடைகின்றனர்:

இந்நிலையானது மாற வேண்டும். மாறும் போது தான் மக்கள் சக்தியானது வடிவெடுக்கும். அப்படி வடிவமெடுக்குமானால் அதுவே தான் உருக்குறுதியுள்ள சக்தியாகவும் இருக்கும். ஐரோப்பாவிலேயே பல சஞ்சிகைகள், சிறு சிறு அமைப்புகள், இலக்கியச் சந்திப்பு (மக்களுக்கு சென்றடையாத இலக்கியம்)என தமது ஆர்வத்துக் அமைய செயற்பட்டு வருகின்றனர். நடைபெறும் விவாதங்களோ விஞ்ஞான ரீதியில் அமையாமல் மாறாக அவைகளில் பெரும்பாண்மையானவை கேள்வி ஞானத்தில் அமைந்த விவாத முறையைத்தான் கொண்டுள்ளது. இது எமது தமிழ் சமுதாயத்திற்கு சாபக்கேடாகக் கருதலாம். கேள்வி ஞானத்தில் இடம் பெறும் விவாதமானது எவ்விதமான வளர்ச்சியையும் அடைய விடாமல் அப்படியே உறைந்த நிலையை இடைகின்றது. இதன் காரணமாக சமுதாயத்திற்கு வேண்டிய நல்ல கருத்துகள் வளர்ச்சியடைந்து அவை சமூகத்திற்கு பயன் படாமல் அவை கருத்துக்களாகவே இருப்பதன் மூலம் மலட்டுத் தன்மையை அடைகின்றது. இதன் மூலம் பிரயோசனப்படுவது அல்லது பலன் அடைவது யார்? அத்துடன் நீ 100வீ புரட்சிக்காரனா அல்லது நான் 100வீ புரட்சிக்காரனா என்ற போக்கிலேயே விவாதங்கள் அமைகின்றது. இவ்விவாதங்களானது தொடங்கிய இடத்தில் இருந்து மாறி திட்டல் தொடங்கிய இடத்தில் இருந்தே புதிய விவாதத் தொடக்கம் இடம் பெறுகின்றது. அதாவது ஒருவர் ஒரு விவாதத்தை முன்வைக்கின்றார் அதற்கான பதில் விவாதத்தை முன்வைக்கும் போது அதில் ஒருவர் ஒருவரை திட்டிவிடுகின்றார். பிறகு என்ன திட்டிய இடத்தில் இருந்து விவாதம் தொடரும் போது விவாதமானது திசை திரும்பி விடுகின்றது. இச்சஞ்சிகைகளில் புலிகள் தேசிய முதலாளித்துவ சக்தியா அல்லது தரகு முதலாளித்துவ சக்தியா என விவாதம் தொடங்கப்பட்டது. ( தேசிய முதலாளித்துவ சக்தி என்பது ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்த முதலாளித்துவ வர்க்கமானது தனதும் தனது இனத்தின் சுயாதிபத்தியத்தை அடகு அல்லது விற்று விடாமல் தனது தேசத்தின் பொருளாதாரத்தை காப்பாற்ற முயல்பவர்களை தேசிய முதலாளிகள் ஜதனது சொந்த இனத்தை அல்லது வேற்று இன மக்களையும் சுரண்டும்ஸ எனவும், தனது தேசத்தை எவரிடமும் அடைவு வைக்கத் தயாராகவுள்ள சக்திகளை தரகு முதலாளித்துவம் எனவும் சுருக்கமாகக் கூறலாம். உதாரணமாக நோர்வேயை எடுத்துக் கொண்டால் ஐரோப்பிய ஒன்றியத்தில் ( NEI TIL EU) இணைவதற்கு எதிராகச் செயற்படும் (SP) மைய கட்சியானது தேசிய முதலாளித்துவ சக்தியாகும். அதேபோல் தரகு (பிரதிநிதித்துவப்படுத்துவது) முதலாளித்து குணாம்சத்தை ஒத்த மற்றைய (கட்சிகளான தொழிலாளர் கட்சி (AP) ஒரு பகுதி, பழமைவாதக் கட்சி (Høyre) )இவைகள் ஏகபோக முதலாளிகள், ஏகாதிபத்தியவாதிகள்) இலங்கையை எடுத்துக் கொண்டால் யூ என் பீ தரகு முதலாளித்துவக் கட்சி) எனத் தொடரப்பட்ட விவாதமானது இப்போது வேறு திசை மாறி அவ்விவாதமானது தொடராது நின்றுவிட்டது:

இன்னுமொரு விசித்திரமான தன்மையையும் காணலாம். அதாவது கவர்ச்சி வாதம். ஒரு தனிநபர் அல்லது ஒரு குறிப்பிட்ட குழு தனது இலக்கினை அடைவதற்காக பாவிக்கப்படும் மக்களை கவரும் ஒரு கோசத்தினைக் கொண்டு பிரபல்யமாவது அல்லது கவர்ச்சி கோசத்தினைக் கோண்டு மக்களை தன்பின்னே அணிதிரட்டுவதாகும். இதனை இந்திய-தமிழக அரசியலைக் கோண்டு இலகுவாக இனங்காணலாம். கவர்ச்சி அரசியலின் வெற்றி நாயகனாக எம் ஜி ஆர் அவர்களைக் குறிப்பிடலாம். இதேபோலத்தான் அண்மையில் கருக்கலைப்பு விவாதம் தொடங்கப்பட்டது. (கருக்கலைப்பு தொடர்பானதும், சிறந்த விவாத முறைமையைக் கொண்ட ஒரு ஆக்கத்தினை பெண்கள் அணியினர் சக்தியில் பிரசுரித்திருந்தனர். இவ்வாக்கம் பல கேள்விகளுக்கும், பல விமர்சகர்களின் விமர்சன முறைக்கும், விமர்சனங்களுக்குப் பதிலாகவும் இருக்கின்றது. அவர்கள் குறிப்பிட்டது போல் அதனை விரிவாக்கி எழுதும் போது புத்திஜீவிகளுக்கு என எழுதாமல் சாதாரண நிலையினர் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் எழுதப்படவேண்டும்:)

ஒரு குடும்பத்தின் தனிப்பட்ட விடயத்தில் தலையிட்டு அதன் மூலம் பிரபல்யமாகிய சம்பவமும் உண்டு. ஒரு பெண் கருவைச் சுமப்பதா இல்லையா? என்பதைத் தீர்மானிப்பது அவளின் செந்தவிடயம். அதில் தலையிட எவருக்கும் உரிமை இல்லை. ஆனால் கருவைக் கலைப்பதற்கு காரணமாக இருக்கும் இச்சமூகத்தை மாற்றி அமைக்கப் போராடுவது தான் விமர்சிக்க முயல்பவர்களுக்குள்ள கடமை ஆகும். இதனை விடுத்து குடும்பத்தில் தலையிடுவது புரட்சி அரசியல் ஆகாது. ஒரு குடும்பத்தின் தனிப்பட்ட விடயத்தில் தலையிட்டதன் முலம் இச்சமூகம் அடைந்த லாபம் என்ன? ஒன்றுமே இல்லை. ஆனால் அந்நபரும், சஞ்சிகையும் பலர் பேசும் நிலைக்கு மாறியது. இதன் மூலம் பத்திரிகை ஆனது தனது இலக்கை அடைந்துவிட்டது. ஆனால் அக்குடும்பம் சந்திக்கு வந்தது. இச்சமூகத்தின் குத்தல் கதைக்கு ஆளாகியது (வெறும் வாய்க்கு அவல் கிடைத்தது போல), இதன் மூலம் உளவியல் ரீதியாக பாதிக்கப் பட்டிருப்பார்கள். மற்ற ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கையை பத்திரிகையில் எழுதுவது உதாரணமாக எமக்கு எல்லோருக்கும் பரிட்சயமான பத்திரிகைகள் ஆன யூனியர் விகடன், நக்கீரன், ...... போன்ற கிசு கிசு மஞ்சல் பத்திரிகைப் பாணியில் எழுதுவது, இப்படி எழுதுவதையும் புரட்சி என வாய்ச் சவடல் அடிப்பது, இந்தச் சமூகம் எப்படி எனத் தெரிந்து கொள்ள முயற்சிக்காததின் வெளிப்பாடே ஆகும். இந்தச் சமூக அமைப்பானது நோய்வாய்ப்பட்டுள்ளது. இச்சமூகத்தின் நோய் எம்மீது எல்லோர் மீதும் தொற்றியுள்ளது. இதனை நாம் மறுக்க முடியாது. உதாரணமாக எயிட்ஸ், (HIV) வைரஸ் உள்ள தாய் தகப்பனுக்கு பிறக்கும் பிள்ளை அதே வைரஸ் உடன் பிறப்பதில்லையா? அதேபோலத்தான் இச்சமூகத்தின் ஒவ்வோரு உறுப்பினர்களுக்கும் இச்சமூகத்தின் வியாதி தொற்றியதை மறுத்து எமது விமர்சனமானது அமையும் இடத்தில் விமர்சனமானது விஞ்ஞானபூர்வமாக அமையாது மாறாக மஞ்சள் பத்திரிகை போலத்தான் அமைகின்றது.

சஞ்சிகைகளில் பல மக்கள் மத்தியில் இருந்து அன்னியப்பட்டு அல்லது மக்களுக்குக் கிடைப்பது இல்லை என்றே கூறலாம். அத்துடன் சஞ்சிகைகள் உள்ளடக்கி வரும் ஆக்கங்களைப் பார்க்கும் போது ஏதோ சஞ்சிகை வந்தால் போதும் என்ற வகையில் வெளிவருகின்றன. அதேவேளை இங்குள்ள மக்களைப் பற்றிய ஆய்வு எதனையும் செய்யவில்லை எனப்படுகின்றது. இன்றைய நிலையில் வெளிவரும் சஞ்சிகைகளில் உள்ளடக்கம் சந்தா தாரர்களின் தொகை இவற்றைக் கொண்டு இம்முடிவுக்கு வரவேண்டி உள்ளது. ஒரு பத்திரிகை தொடர்ந்தும் உயிர்த் துடிப்புடன் வரவேண்டுமானால் அதற்கு சக்தி மிக்க கருத்தைக் கொண்ட அமைப்பு இருக்க வேண்டும். அது முன்நிபந்தனை ஆனது எனினும் விஞ்ஞான ரீதியான ஆய்வு முறையைக் கொண்டு, விஞ்ஞான ரீதியிலான கருத்தைக் கோண்டு விவாதங்கள், ஆக்கங்கள் இடம் பெறுமாயின் உயிர்த்துடிப்புள்ளதாக இருக்கும். அத்துடன் சஞ்சிகைகள் மக்களிடம் இருந்து அன்னியப் பட்டிருப்பதற்கான காரணம் என்ன? மக்களை முட்டாள்களாக கருதுவதன் வெளிப்பாடா? இவர்கள் எழுதுவது யாருக்காக? இவர்களுடைய நோக்கம் தான் என்ன?

ஆனால் மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள் செயற்படாது இவ்வாறாக அமையாது. மாறாக மக்கள் நலனிற்கு எது முதன்மையாகப் படுகின்றதோ அதற்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

இன்னோரு விடயம் அதுதான் கவிஞ்ஞர்கள். இவர்கள் கலை மக்களுக்காக என எழுதுகிறார்கள். இவர்கள் எழுதுபவைகளில் பெரும்பாண்மையானவை மக்களிடம் சேர்வதே இல்லை. இவர்கள் இங்கிருந்து கொண்டு தேசத்தில் இருக்கும் மக்களைப் பற்றி ஒப்பாரியாக கவிதைகள் எழுதுவார்கள். அவர்களில் வசதிபடைத்தவர்கள் புத்தகமாக வெளியிடுவார்கள். இவற்றை இவர்கள் நடத்தும் இலக்கிய சந்திப்பில் பெரிய ஆரவாரத்துடன் அங்கு வெளியிடுவர். அத்துடன் இலக்கியச் சந்திப்பில் ஏதோ அவர்கள் ஒவ்வோருவரும் எழுதியதை வாசிப்பார்கள் தாம் ஒவ்வோரும் ஒருவரை ஒருவர் புகழாரம் சூடிக்கொள்வார்கள். அதுசரி மக்களுக்காக கலை இலக்கியம் என்றால் அவைதான் என்ன? எங்களுக்குச் சொல்லுங்களேன். மக்களுக்காக இலக்கியம் படைப்பவர்களே என்னத்தை மக்களுக்காக சாதித்து விட்டீர்கள். இதனை இன்னும் ''விரிவாகப் பார்ப்போமானால் ஒரு புதிய சஞ்சிகை அல்லது புதிய எழுத்தாளர்கள் களத்திற்கு வரும் போது ஒரு போட்டியாளனாகக் கருதுவதும், ஆக்கங்களை பிரசுரிக்காமல் தவிர்ப்பதும் ஒரு வாடிக்கையான''விடயம். அதேவேளை சஞ்சிகையானது தனக்கு லாபம் கிடைக்கக் கூடியது எதுவே அதனை தூக்கிப் பிடித்துக் கொண்டாடுவதும் வாடிக்கையாக நிகழ்கிறது. உதாரணமாக எடுத்துக் கோண்டால் ஒரு எழுத்தாளர் பிரபல்யமாக இருந்தால் அவரின் கவிதை, கதைகளை பிரசுரித்தால் அதுவே அந்தஸ்து என கருதுகின்றனர். புகழ் உச்சியில் இருக்கும் கலை இலக்கிய வாதிகளை, மக்களுக்காக கலை இலக்கயைத்தைப் படைப்பவர்கள், இவர்களிடம் இருந்து தான் நல்ல இலக்கியங்கள் வெளிவரும் எனப் புகழ்ந்த பெருமை தமிழக நக்சலைட் போராளிகளையே சாரும். நக்சலைட் போராளிகள் வெளிப்புறத்தை கொண்டு விமர்சித்தனர் (அவர்களின் விமர்சன முறைறைமையானது சரி). ஆனால் இவர்களோ தம்மை ஒரு பாரதியாக, கம்பராக, இளங்கோவாக எதிர்கால இலக்கியத்தில் கதைக்கப்பட வேண்டும் என இலக்கியம் படைப்பவர்களாகவே இவர்கள் இருக்கின்றனர்.

மக்களுக்காக இலக்கியம் என்னும் போது ஒரு கையில் எழுது கோல் மறு கையில் ஆயுதம் அல்லது சக்தி மிக்க கருத்து அல்லது மக்கள் இலக்கியத்தை எவ்வாறு மக்கள் மத்தியில் பிரதிபீடு செய்யப்போகிறார்கள் என்ற வழிமுறைகளை ஆவது கண்டிருக்க வேண்டும். இவைகள் எதுவும் இல்லாத கலை இலக்கியம் என்பது மக்களுக் உரியவைகள் அல்ல. மறாக அவை 'கூத்தடிப்பது குண்டி நெழிப்பது மாட்டான் செய்யும் தொழில்' என்ற சாதாரண இழி நிலைக்குத்தான் அவை சென்றடையும்.

இறுதியாக சஞ்சிகைகள், அமைப்புகள், இலக்கிய சந்திப்புகள் எல்லாம் மக்கள் நலனில் இருந்து தான் இயங்குகின்றனவா? என மேற்கூறியது போல் கேள்வி கேட்கப்பட வேண்டும். அவை மக்கள் நலனில் மீது தான் அவை நடைபெறுமாயின் எல்லா வகையான முறைமைகளும் விஞ்ஞான வகைக்கு உட்பட்டதாக அமைய வேண்டும். அவைகள் செயல் வடிவம் பெறவேண்டும். அதனை விட்டு யார் தூய்மை வாதி, யார் புரட்சி வாதி, கேள்விஞான விவாதமுறை, பெயருக்காக இலக்கியம் என தொடருமாயின் மக்கள் மக்கள் என உச்சரிப்பதில் எது வித அர்த்தமும் இல்லை. இப்படியான நிலையினை போக்க வேண்டும் என்றால் மக்கள் என்று உச்சரிப்பவர்கள் அனைவரிடமும் மக்கள் கேள்வி கேட்க வேண்டும். அப்போதுதான் போலியானவற்றை ஓரளவிற்கேனும் தடுக்க முடியும்.

இறுதியாக ஒரு வார்த்தை இக்கருத்தினை சஞ்சிகைகள் எதிர்ப்பு, தனிநபர் எதிர்ப்பு, இலக்கியச் சந்திப்பு, கவிஞ்ஞர்கள் எதிர்ப்பு வாதம் என்ற வரையறைக்குள் இருந்து இதனை நோக்கினால் எவ்விதமான பலனும் எற்படமாட்டாது. மாறாக கருத்து என்பது வளர்ச்சி அடையாது மலட்டுத் தன்மையைத்தான் அடையும். கருத்தை கருத்தாக பார்க்காத தன்மைதான் மேலோங்கி இருக்கும்.

*இதில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அனைத்தும் விவாதிக்கப்பட வேண்டியவை. விவாதிக்கப்படும் போது மக்கள் நலனின் அடிப்படையில் நின்றே விவாதங்கள் அமைய வேண்டும். இக்கட்டுரை பற்றிய கருத்தை மக்களிடம் இருந்தே எதிர்பாக்கின்றோம்.*

*-சுமைகள்-*

படிப்பகம்

www.padippakam.com



சிறுகதை

# துவக்கு...!



துவக்குகள் தூக்கப்படத்தான் வேண்டும். ஆனால் யார் யாருக்கு எதிராகத் தூக்கப்பட வேண்டும் என்ற அறிவு வேண்டும், தெளிவும் வேண்டும்.

--நிலாதரன்,(DENMARK)--

கனகாலமில்லை கொஞ்ச நாளைக்கு முன்னர்தான் என்ரை மச்சான் ஒருவன் கனடாவுக்கு வந்து சேர்ந்தான். நீங்கள் நினைப்பது போல் ஒரு பெரிய மச்சான் என்று சொல்வதற்கில்லை. ஏழே ஏழு வயதுதான் இப்போது அவனுக்கு தொடங்குகிறது. அவனிட்டை இவனிட்டை என்று காசைக் கட்டி மாமா ஒருமாதிரி மாமியையும் மகனையும் கூப்பிட்டு விட்டார். மாமியும் மச்சானும் வந்து ஒரு கிழமை ஆகின்றது. இன்னும் அவர்களோடு கதைக்கவில்லை. எப்படியும் இண்டைக்கு கதைக்க வேண்டும் என எண்ணியதோடு வீட்டுக்காரர் மச்சான் தினேஸ் பற்றி எழுதும் விசயங்களை ஒரு கணம் நினைத்துப் பார்த்தேன். சொல்ல முடியாத குறும்புத்தனங்கள், சேட்டைகள், பகிடிகள், புத்திசாலித் தனங்கள், வீரசாகசங்கள். அவனைப் பற்றி வீட்டுக்காரர் எழுதாத நாட்களே இல்லை என்று தான் சொல்லலாம். ஒரு நாளாவது அவனைக் காணாவிட்டாலும் ஏதோ அவனோடும் குடும்பத்தாரோடும் வாழ்வது போன்ற பிரமையை கடிதங்கள் அடிக்கடி ஏற்படுத்தும். இன்று தினேசோடு கதைக்கப் போகிறேன் என்ற ஆதங்கம் மேலோங்கி நின்றது. மாமியோடு என்னென்ன கதைக்க வேண்டும் என்று சிறு குறிப்பு எடுத்துக் கொண்டு ரெலிபோன் பட்டின்களை அழுத்தினேன

"ஹலோ... ஹலோ... நான் டென்மார்க்கில் இருந்து கதைக்கின்றேன். மாமா எப்படி

"சும்மா இருக்கிறம். இஞ்சை தெரியாதே ஊர்ப்புதினங்கள் அறிய சனம் வந்து போகுதுகள், அதோடை ஊர்ப்பெடியளும் வந்து போறாங்கள். ஒரே பிசி

"என்னவாம் மாமியும் மகனும

"இந்தா நீ கதையன். ஒருமாதிரி வந்து சேர்ந்திட்டினம்." எனக் கூறிவிட்டு மாமியிடம் கொடுத்துவிட்டார். "ஹலோ யார் மாமியே? எப்படி? என்ன குரல் எல்லாம் மாறிப் போச்சு. மாமி எப்படி இருக்கிறிங்கள்? எப்படி பிரயாணம

"ஐயோ தம்பி அதையேன் பேசுவான் கொழும்பில் இருந்து இஞ்சை ஒரு நாளைக்குள் வந்துவிட்டேன். ஊரிலிருந்து கொழும்புக்கு வரப்பட்ட கஸ்டங்கள், துன்பங்கள் உயிர் தப்பி வந்ததே அதிஸ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்." என்று அவ சொல்லிய விதத்திலும் அந்த வேகத்திலும் அவர்கள் பட்ட கஸ்டங்கள் ஓரளவு என்னால் புரிந்து கொள்ள முடிந்தது

"சரி மாமி வீட்டுக்காரர் எல்லாம் எப்படி இருக்கினம்?" மறுபுறத்தில் எதுவித பதிலும் இல்லை. ஜன்னல் திறந்திருந்ததால் வெளியே செல்லும் வாகனங்களின் இரச்சல் இலேசாகக் கேட்டது

"மாமி... மாமி என்ன

"இல்லைத்தம்பி இருக்குதுகளோ செத்துப் போங்களோ தெரியாது" மாமியின் குரல் தளதளத்தது

"இப்போது ஆமிப்பிரச்சனையிலும் இயக்கப் பிரச்சனையிலும் சனம் சாவதிலும் விட பட்டினியால் சனங்கள் செத்துப் போகுங்கள் போல கிடக்கு. காசு இருந்தாலும் ஒன்றும் வாங்க முடியாத நிலை. எந்தளவு நாள் சாப்பிட்டிருப்போம்? எந்தளவு நாள் நிம்மதியாய் நித்திரை கொண்டிருப்போம்? ஒரு நாளாவது ஒழுங்க குளிச்சு முழுகி இருக்க மாட்டோம். எங்கட நாடும் சண்டையும்" மாமியால் தொடர்ந்து கதைக்க முடியாமல் விக்கினார். எனக்கும் தொடர்ந்து கேட்க மனம் சங்கடப்பட்டது

"மாமி நான் பிறகு ஒருநாளைக்கு கதைக்கிறேன். இப்ப அவன் தினேஸிடம் ஒருக்காக் கொடுங்கோ." மாமி தினேஸைக் கூப்பிடும் சத்தம் தெளிவாய் கேட்டது. வெளியே இருந்து வந்து கொண்டிருந்த குளிர் காற்று உடம்பை சிலிர்க்க வைத்தது. அந்தக் காற்றின் இரச்சலோடு எங்கேயோ ஓடிக்கொண்டு போகும் வாகனத்தின் இரச்சலும் கலந்து வந்தது

"ஹலோ நான் தினேஸ் கதைக்கிறன்.......

தினேஸ் நான் யார் கதைக்கிறன் செல்லு பார்ப்போம

"அத்தான் தான்" எதுவித இடைவெளியும் இல்லாமல் சட்டென பதிலளித்தான

"என்னண்டு உனக்குத் தெரியும் மெய்யே" சிரித்துக்கொண்டே "அம்மாதான் சென்னவ"

"அதுசரி தினேஸ் கனடா பிடிச்சிருக்கோ?" "ஓ" என அழுத்தமாக சுத்தமாகச் சொன்னான

"அப்பா என்னவாம்? டேய்.... என்னவாம்?" ஏதுவித பதிலும் இல்லை. "தினேஸ் என்ன ஒன்றும் பேசுறாயில்லை

"இல்லை" ஏதோ இழுத்தபடி தயங்கினான் தினேஸ். "என்ன பிரச்சனை? கொப்பாவோட கோபமே?" தயக்கத்தோடு நானும் விசாரித்தேன

"அப்பா எனக்கு துவக்கு வாங்கித் தாரார் இல்லை ரியல்கண் வாங்கித் தாரார் இல்லை. உண்மைத் துவக்கு வாங்கித் தாரார் இல்லை

"அப்பா ஏன் வாங்கித் தரமாட்டேன் எங்கிறார்?" எனக்கு விளங்காமலே கோட்டேன

"அப்பா வாங்கித் தந்தவர் தான் அது றபர்த்துவக்கு. எனக்கு உண்மையான துவக்கு வேணும். உண்மை வேண்டும்." அடம்பிடித்தபடியே கதைத்தான். எனக்கு ஒன்றுமே புரியாமல் இருந்தது. என்னடா இவனுக்கு ஏழு வயது தானா என்ற சந்தேகம் என்மனதில் எழுந்தது. கொஞ்ச நோரம் ஒன்றுமே கதையாது மௌனமானேன். மாமாவிடம் வந்திருந்த விருந்தினரின் கலகலப்புச் சிரிப்பு என் மௌனத்தைக் குலைத்தது

"தினேஸ் உனக்க இங்கே ஏன் உண்மையான துவக்கு வேணும்" என்றேன

"ஊரிலேதான் சண்டை நடக்குது அங்கே வைத்திருக்கக் கூடாது என்று அம்மா சொன்னவ. ஏன் இங்கே சண்டை இல்லைத் தானே இஞ்சை வாங்கித் தரலாம் தானே" என்னைக் கோவிப்பது போல் அதட்டிக் கதைத்தான

"தினேஸ் நீ இன்னும் பெரியவனாய் வளர் உன்மைத் துவக்கு என்றால் என்ன வென்றும், ஏன் பாவிக்க வேண்டும் என்றும் விளங்கும். நீ பெரியவனாய் வளர் நான் வாங்கித் தருவேன் என்ன" சமாதனம் செய்வது போல் தயவாகப் பதிலளித்தேன

கோபம் கொண்டவன் போல் "பெரிய மாமாவின் கண்ணன் அண்ணா ஊரிலே வைத்திருக்கிறான் தானே. அவன் என்ன பெரியவனா?" நான் ஒன்றுமே பேசாது அந்தக் கண்ணனை நினைத்துக் கோண்டேன். பக்கத்து வீட்டு சின்னத்தங்க மாமியின் முத்த மகன்தான் கண்ணன். இரண்டோ, மூன்றோ வருடங்களுக்கு முன்னர் இயக்கத்துக்குப் போன ஒரு விடுதலைப் போராளி. சின்னத்தங்க மாமியின் கலியாணம் நடந்தது இன்று போல் இப்போதும் எனக்குப் பசுமையாய் இருக்கிறது. ஒரு பன்னிரண்டோ பதின் மூன்றோ வருடங்கள் தான் இருக்கும். இப்போ கண்ணன் ஒரு பெரிய போராளி

தினேஸ் நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம் நான் வரும் போது உனக்கு துவக்கு வாங்கிக் கொண்டு வருவேன். உண்மை வாங்கிக் கோண்டு வருவேன். நீ கவலைப் படாதை என்ன. நான் அடுத்த முறை ரெலிபோன் எடுக்கிறேன் என்ன." ஓ.கே சொல்லிவிட்டு போனை வைத்து விட்டேன

என்னுடைய எண்ண அலைகள் எங்கெங்கோ அலைமோதி மூளையைக் குழப்பியது. துவக்கு... துப்பாக்கி... துவக்கு... துப்பாக்கி.... இயக்கங்கள்... போராட்டம்.... புரட்சி.... பசி... பட்டினி... சாவு... நாடு... மக்கள்... துக்கம்... துயரம்... அகதிகள்... கொலைகள்... காட்டிக் கொடுப்புகள்... துவக்குகள்... துப்பாக்கிகள்... மாறி மாறி ஒவ்வெரு சொல்லாய் வந்து விழுந்தது

நாங்கள் சின்னனாய் இருந்த காலங்களில் எம்ஜியாரின் படங்களைப் பார்த்து விட்டு வந்து நானும் தம்பியும் விளையாட்டுத் துவக்குகளும், வாள்களும் செய்து சண்டைப்பட்டதும், சன்னதித் திருவிழாக் காலங்களிலும், வேறு கோவில் திருவிழாக் காலங்களிலும் அம்மாவோடு அடம் பிடித்து தண்ணித் துவக்கு வாங்கிக் கொண்டு வந்து அதை பள்ளிக் கூடத்தில் கொண்டு போய் சக நண்பர்களுக்குக் காட்டிபோது அவர்கள் அதைத் தடவிப் பார்த்துவிட்டு "டேய் என்னிடம் ஒருக்காத் தாடா" எனக் கேட்கிற வேளையில் நான் மறுக்கின்றதும் அடுத்தடுத் திருவிழாக்களில் மற்றைய நண்பர்கள் கிடைச்சிக் கட்டை போட்டுச் சுடும் மாத்தலான துவக்குகளை வாங்கிக் கொண்டு வந்து எனக்குக் காட்டும் போது எனக்கு அப்படி ஒரு துவக்கு இல்லையே என ஏங்கித் தவித்த அந்தப் பொல்லாத நாட்கள் இன்னும் என் மனதில் பசுமையாய் ஆழமாய் நிறைந்திருக்கு

"துவக்கு" "துப்பாக்கி" என்ன ஆழமான அற்புதமான வார்த்தை. இந்தச் சொல்லால் எவ்வளவு உறுதியும் வலுவும் இருக்கின்றது. இந்தத் துவக்கானது எத்தனையோ சொல்ல முடியாத எழுத முடியாத சாதனைகளையுத் அழிவுகளையும் ஏற்படுத்தி இருக்கின்றது. எத்தனையோ மண்ணில் மனிதர்களை மனிதர்களாக வாழ வைத்ததும் இந்தத் துவக்குகள் தான். எத்தனையோ மனிதர்களின் மானிடத்தை மழுங்கடித்ததும் இந்தப் பாழாப் போன பொல்லாத துவக்குகள் தான

இலங்கையை இந்தியாவை இன்னும் எத்தனையோ நாடுகளை வெள்ளையர்கள் வந்து அடிமைப் படுத்தியதும் இந்தத் துவக்கால் தான். அம்போடும் வில்லோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் செவ்விந்நிய இனத்தை இல்லாமல் செய்ய நினைப்பதும் இந்தத் துவக்கால் தான். தென்னாபிரிக்க கறுப்பு இன மக்களையும் அடக்கி ஆண்டு அடிமைப் படுத்திக் கொண்டிருப்பதும் இந்த துவக்குகள் தான். இன்று உலகம் முழுவதும் அமைதி குலைந்ததற்கும், அடிமைத் தனங்கள் வளர்வதற்கும் காரணம் எங்களிடம் துவக்கு இருக்கு என்பதால் தான். துப்பாக்கிக் குழலில் இருந்து அரசியல் அதிகாரம் பிறக்கிறது என்றான் மாவோ சேதுங். அடிமைப் படுத்திய யப்பானிய ஏகாதிபத்தியத்தை அடித்து விரட்டி மக்கள் ஆட்சி ஒன்றை நிறுவுவதற்கு வழிவகுத்ததும் இந்தத் துப்பாக்கி தான். ஆனால் அரசியலைத் தான் முன்னிலையில் வைக்கும் படியும் (மக்களின் நலனுக்காக) அதற்கு கீழ்படிந்து தான் துப்பாக்கி இருக்க வேண்டும் எனவும் கூறினார்

துவக்குகள் தூக்கப்படத்தான் வேண்டும். ஆனால் யார் யாருக்கு எதிராகத் தூக்கப்பட வேண்டும் என்ற அறிவு வேண்டும், தெளிவும் வேண்டும

துப்பாக்கியை கூடாதவர்கள் தூக்குகின்ற போது தான் அது கூடாமலே போகின்றது. இன்று பிழையான விடையங்களுக்கும் தவறான நிலைகளுக்கும் துப்பாக்கி பிரயோகப்பட்டதாலும் நல்ல விடையத்துக்காக துவக்குத் தூக்கியவர்களும் இன்று பிழையான தவறான முறையில் விமர்சிக்கப்பட்டு இழிவு படுத்தப் படுகின்றார்கள

தொடர்ந்து என்னால் யோசித்துப் பார்க்க முடியவில்லை. துவக்கு... துவக்கு... துவக்கு... எதைத் துவக்குவது... யார் துவக்கவது... எப்போ துவக்குவது... துவக்கத் தான் வேண்டும் எம் விடியலுக்காக, எம்மக்களுக்காக... நாங்கள் எல்லோரும் துவங்கத்தான் வேண்டும்... வெளியெ இருந்து வந்து கொண்டிருந்த குளிர் காற்று என்னுடலில் பட்டு புதிய உற்சாகத்தை அளித்தது.

படிப்பகம்

www.padippakam.com




TAMILSK FEIDE

Arbeiderbladet

TENTE PÅ bolig-blokk SOM HEVN?

Mandag 18. april braket et stort antall tamiler sammen i slagsmål på Østre Aker vel.

Senere samme dag begynte det å brenne i en boligblokk i Tante Ulrikkes vei på Stovner, hvor flere av de involverte tamilene bor. Politiet tror brannen ble påsatt.

I går arrangerte Norsk tamil-forening et møte på grunn av mandagens hendelser. Nå ber foreningen om at de få tamilene som ødelegger for de mange andre, blir kastet ut av Norge.

# ஒஸ்லோவில்

## நீங்கள் பிழைப்பு நடத்த

சித்திரை 18 Østre Akers vei வீதியில், ஒஸ்லோ வாழ் சில தமிழ் இளைஞ்ஞர்கள் தங்களுக்குள் மோதிக் கொண்டனர், சிலர் காயமடைந்தனர். ஒஸ்லோ பொலீஸ் தலையிட்டு காயமடைந்தவர்களை வைத்திய சாலைக்கும், சிலரை விசாரணைக்காகவும் அழைத்துச் சென்றனர். இந்த நிகழ்ச்சி நடந்து சிலமணி நேரங்களின் பின் இப்பிரச்சனையில் சம்மந்தப்பட்டவர்கள் குடியிருக்கும் தொடர் மாடிக் கட்டிடத்தில் தீப்பற்றி எரிந்தது. ஒஸ்லோ பொலிசும், பத்திரிகைகள், வானொலிகள் அனைத்தும் தமிழர்களின் மோதலுக்கும், தொடர்மாடி தீப்பற்றி எரிந்ததற்கும் தொடர்பு உண்டு என செய்தி வெளியிட்டன.

இவை அனைத்தும் நடைபெற்று சில தினங்களின் பின் (22ம் திகதி) நோர்வேஜியர், தமிழர் இணைவு கூடம் கூட்டம் கூட்டி, 'குற்றச் செயலில் ஈடுபடும் தமிழர்களை' உடனடியாக நாட்டை விட்டு வெளியேற்றுமாறு வேண்டுகோள் விடுத்தது. இவ்வறிக்கை பற்றிய விபரங்களும், மற்றும் நோர்வேஜியர், தமிழர் இணைவு கூடப் பேச்சாளரினதும், மற்றும் தலைவர், செயலாளர், மத்திய குழு அடங்கிய புகைப்படத்துடன் பேட்டியும் ஒஸ்லோ பத்திரிகையான ஆர்பைடர்பிளா(Arbeiderbladet) வெளியிட்டது.

இக்கட்டுரையில் நோர்வேஜியர் தமிழ் இணைவுகூடத்தின் பின்னணியையும், அதன் சமூகப்பார்வையையும் ஆராய்வதன் மூலம் நோர்வேஜியர் தமிழ்ர் இனைவுகூடம் ஒஸ்லோ கலவரம் பற்றி வெளியிட்ட அறிக்கையையும், பத்திரிகைச் செய்தியையும் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். இக் கட்டுரையில் குற்றச்செயல்களில் ஈடுபட்ட தமிழர்களைப் பற்றிய எந்தவகை விமர்சனத்தையும் தவிர்த்துக் கொள்கிறேன். இதன் அர்த்தம் அவர்களுக்கு நான் பயப்படுகின்றேன் என்றோ அல்லது அவர்கள் என்னை பலாத்காரப்படுத்துவார்கள் என்றோ, நோர்வேஜியர் தமிழ்ர் இனைவுகூடப் பேச்சாளர் திரு சச்சி கூறுவதுபோல் நான் கூறவில்லை.

நோர்வே எமது தாய் நாடல்ல. பலபிரச்சனைகள், யுத்தம், தனிப்பட்ட முரண்பாடுகள் போன்று பல சொல்லவெண்ணா துயரங்களுக்கு உட்படுத்தப்பட்டு இறுதியில் பல ஆயிரம் ரூபாய்களை செலவு செய்தே நம்மில் பலர் நோர்வேயில் குடியேறி உள்ளோம். நாம் குடியேறி உள்ள இந்த தேசங்கள் நமக்கு அன்னியமானவை. இந்த நாடுகளின் கலை, கலாச்சாரம், பொருளாதாரக் கட்டுமானம், இவைகளின் அடிப்படையிலான மனித உறவுகளும் அதன் பெறுமானமும் நமக்கு அன்னியமானவை. இந்த நிலையில் இந்நாடுகளில் காணப்படும் சட்ட திட்டங்கள், சமூகக் கட்டுமானங்களுக்கு இயல்பானதாக நடப்பதற்கு இந்நாட்டு அரசும் அதன் ஸ்தாபனங்களும் எம்மை நிர்பந்திக்கின்றது. யுத்த சூழ்நிலையில் உறவுகள், உணர்வுகளை இழந்து பாதிக்கப்பட்ட எம்மில் பலரால் இந்த வெளிநாட்டுச் சூழ்நிலைக்கேற்ப இசைந்து போக முடியவில்லை. அன்னிய சமூகக் கட்டுமானத்தை புரிந்து கொள்வதும் எமக்கு இலகுவாக இருப்பதில்லை.

என்னைப் பொறுத்த அளவில், 'குற்றம்' புரிந்ததாக கூறப்படும் இளைஞ்ஞர்கள், நோர்வே அரசின் குடிபெயர்ந்தவர்களைத் தம்நாட்டு சட்ட திட்ட, சமூகக் கட்டுமானத்துள் நிர்பந்திக்கும் அரசியற் செயற்பாட்டினால் பாதிக்கப் பட்டவர்களாகவும், இந்நிர்ப்பந்தத்திற்கு கட்டுப்படாமல் சீவிப்பவர்களாகவே புரிந்து கொள்கிறேன். இவர்களின் செயல் "குற்றம்" என்று கூறுவதற்கு சட்டத்தில் இடமிருந்தாலும், சமூக அரசியல் காரணிகளின் அடிப்படையிலும், புதிதாக குடியேறிய இனளஞ்ஞர்கள் என்ற அடிப்படையிலும், இவர்கள் செயற்பாடு குற்றம் என்று சொல்ல முடியாததொன்றாகும். மேலும் இளைஞ்ஞர் குழுக்களுள் மோதல் ஏற்படுவது, எல்லா சமூகங்களிலும் எல்லாக் காலங்களிலும் நடைபெற்று வரும் ஒன்று. இது நோர்வேஜிய சமூகத்திலேயும் காணப்படுகின்றது. அதுவும் குறிப்பாக "ஒஸ்லோ" இளைஞ்ஞர் கலவரங்களுக்கு பிரபலமானதோர் நகரமாகும்.

### "ஒஸ்லோ தமிழர் அமைப்புகள்"

மேற்கூறிய படி இந்த இழைஞ்ஞர்கள் மோதல் என்பது ஓர் சாதாரண சமூக நிகழ்வு. இதற்குள் தலையிட்டு தம்மை தமிழ்ச் சமூகத்தில் குற்றம் ஏதும் புரியாதவர்களாகவும், மேல் தட்டு வர்க்க பிரதிநிதிகளாக தம்மை இனங்காட்டிக் கொள்ளவும், நிலைநிறுத்திக் கொள்ளவும் நோர்வேஜியர் தமிழ்ர் இணைவுகூடத் தலைவர்கள் முயன்றுள்ளனர்.

ஒஸ்லோவைப் பொறுத்த அளவில் பல தமிழ் அமைப்புகள் இயங்குகின்றன. ஒஸ்லோ தமிழ் சங்கம், தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, மற்றும் கிறிஸ்தவ அமைப்புகள், — என்று கிட்டத்தட்ட இருபதிற்கு மேற்பட்ட அமைப்புகள் இயங்குகின்றன. (இவற்றுள் ஒன்று தான் நோர்வேஜியர் தமிழர் இணைவுகூடம்) இந்த அமைப்புகள் அனைத்தையும் உள்ளோட்டமாக ஆராய்ந்து பார்த்தால் இவற்றின் ஒவ்வொண்றினுள்ளும் சாதி, ஊர், அரசியல் இயக்கம் அல்லது கல்வி, பொருளாதார அந்தஸ்து போன்ற ஏதாவது ஒன்றேனும் ஆதிக்கம் செலுத்துவதைக் காணலாம். தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண இந்த அமைப்புகள் ஒன்றாய் கூடி விவாதித்த சந்தர்ப்பங்கள் பலவற்றில் மேற்கூறிய சாதி, அரசியல், ஊர் வெறி போன்றன தலை தூக்கிநின்றது எல்லோரும் அறிந்த வரலாறு.

நோர்வேஜியர் தமிழர் இணைவுகூடத்தை எடுத்துக் கொண்டால் அதை இயக்குபவர்கள் சாதி, கல்வி, பொருளாதாரத்தில் மேலோங்கி நிற்பவர்களாகும். இவ் அமைப்பு ஆரம்பத்தில் அகதிகளுக்க உதவி செய்ய ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பிற்காலத்தில் சாதி வெறியர்களாலும், முற்போக்கு முகமூடி அணிந்த கலை, கலாச்சாரம் பரப்புவதாகக் கூறிக் கொள்ளும் சாதி வெறி கொண்ட புத்திஜீவியளாலும், அவர்கள் நலனிற்கு தக்கதாக இயக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் நோர்வேஜியர் தமிழ்ர் இணைவுகூடத்தில் உள்ள இன்றைய தலைவர்கள் ஒஸ்லோ தமிழ் சங்கத்திலேயே அங்கம் வகித்தனர். பின்பு ஒஸ்லோ தமிழ் சங்கத்தை அரசியல் இயக்கம் ஆளுகிறதென்று குற்றம் சாட்டிவிட்டு வெளியேறியே நோர்வேஜியர் தமிழ்ர் இணைவுகூடத்தில் சேர்ந்தனர். இவர்கள் அரசியல் இயக்கத்தை, தாம் வெளியேறுவதற்கு காரணம் கூறினும், இவர்களின் உள் முரண்பாடு, ஒஸ்லோ தமிழ் சங்கத்தில் மாற்று சாதியினர் பெரும்பான்மையாக இருப்பதும், மாற்று சாதியினரின் சொல்லுக்கு தாம் அடங்கிப் போக வேண்டி இருப்பதுமே. மேலும் இவர்களின் "புதிய கலாச்சார" கலை வடிவங்கள் பெரும்பான்மை மக்களிடம் எடுபடாமல் போனமையும் காரணமமாகும்.

மக்களிடம் இருந்து அந்நியப்பட்ட இந்த சாதி வெறியர்களும், அரைப் புத்திஜீவிகளும் பல சந்தர்ப்பங்களில் நோர்வே அரசுடன், தம்மை தமிழ் மக்கள் பிரதி நிதிகளாகவும் அறிமுகம் செய்துள்ளனர். இவர்களின் தொடர்புகள் பெரும்பாலும்


I dag: HELLAS

LØRDAG SØNDAG

Arbeiderbladet

Lørdag 23. april 1994 TLF: 22 22 60 00 Årgang 110 - Uke 16 Nr. 92 Kr 8,00

Tamil om tamil-feiden i Oslo:

-KAST bråk-makerne UT!

Satchi Myluaganam og Tamilsk-norsk Forening sender nå brev til politiet Justisdepartementet om den såkalte tamil-feiden i hovedstaden. Den har resultert i flere blodige, interne oppgjør, senest denne uka.

–Det er en hevn-spiral som aldri tar slutt, og jeg frykter den kan ende med drap, sier Myluaganam. –Myndighetene bør kaste bråkmakerne ut av landet.

SIDE 4-5

DOMMEDAG I TINGHUSET

RUNE, EN RUTEKNUSER

STØRRE LYST ENN FRYKT

TELE 820

NYE teletorget, din guide for 820-numrene.

Onsdag 27. april i Arbeiderbladet

GRENSELØS LØRDAG

2250-

99-

1995-

399-

MEHREN GRENSEN

TLF. 22 42 02 00

வெளிநாட்டவர்களுக்கான பொலிஸ் அதிகாரிகளுடனும், குற்றத்தடுப்பு இரகசிய பொலிஸாருடனும், வெளிநாட்டவர் திணைக்களத்துடனும் (UDI) இருந்து வந்துள்ளது.

இந்த நோர்வேஜியர் தமிழர் இணைவுகூடத்தின் பிரதிநிதிகள், தமிழர்களுள் நடைபெறும் எந்த நிகழ்வுக்கும் (தமது நலனிற்கு எதிரானதாக இருப்பின்) உடனே ஏதாவது ஓர் அரசியல் இயக்கச் சாயம் பூசுவதுடன் நோர்வே சட்ட, சமுக கருத்தியல் அடிப்படையில் பயங்கரவாத முத்திரை குத்திவிடுவர். பின்பு பொலிசுடனோ அல்லது வெளிநாட்டவர் திணைக்களத்துடனோ தொடர்பு கொண்டு தமது விசுவாசத்தை உறிதிப்புடுத்துவர். இச்செயலை தமிழில் துரோகத்தனம் என்று கூறலாம்.

இந்த நோர்வேஜியர் தமிழர் இணைவுகூடத்தின் பத்திரிகைப் பேட்டியையும், குற்றம் புரிந்த தமிழர்களை வெளியேற்றுமாறு அரசைக் கேட்டுக் கொண்டதையும் நான் மேற்படி கட்டுரையில் விபரித்த கண்ணோட்டத்தில் அடிப்படையிலே தான் பார்க்கப்படல் வேண்டும். இவர்களின் இச் செயற்பாடானது தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கான முயற்சியே.

### நோர்வே தமிழர் அமைப்பின் பத்திரிகைப் பேட்டியும், அறிக்கையும்

பத்திரிகைப் பேட்டியை ஆராய்வோம், நோர்வேஜியர் தமிழர் இணைவுகூடப் பேச்சாளர் திரு சச்சி மயில்வாகனம் ஒஸ்லோ பொலிசாருடன் இளைஞ்ஞர் கலவரம் பற்றி நீண்ட நேர உரையாடலின் பின் ஆர்பைடர் பிளா (Arbeiderblad) பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறுகின்றார். 'ஒன்று இரண்டு தமிழ் குழுக்கள் திரும்பத் திரும்ப தமக்குள் மோதிக் கொள்கின்றன. இந்தப் பழிவாங்கும் தொடர்ச்சியான மோதல் கொலையில் வந்து முடியலாம் என நான் பயப்படுகின்றேன். ——, இந்தக் குழப்பக்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, இவர்களின் பயங்கர வாதச் செயல்களை நிறுத்தப் பண்ணும் படி அரசாங்கத்தைக் கோரவுள்ளோம்...... இந்த கலகக் காரர்கள் அடங்காவிட்டால், இவர்களை நாட்டைவிட்டு உடனடியாக வெளியேற்றல் வேண்டும். இந்த குளப்பக்காரர்களின் செயற்பாடானது நோர்வேயில் வாழும் கிட்டத்தட்ட 5000 தமிழர்களையும் (ஒஸ்லோவில் 2000 தமிழர்கள்) பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட ஏதுவானதாக உள்ளது. நாம் வேலைகளில் நின்று நிறுத்தப்படலாம் என்றும் எமது பிள்ளைகள் பள்ளிக்கூடங்களிலும்,

படிப்பகம்

www.padippakam.com



# தமிழர் நிலை

## ாவிமனிதர் நாமா?

-ஏ. சந்திரமோகன்(OSLO)-

சிறுவர்கள் பராமரிப்பு நிலையத்திலும் நகைப்பிற்கு உள்ளாகலாம் எனவும் பயப்படுகிறோம்.......

நோர்வேயில் கடந்த சில வருடங்களாக பாராளுமன்றத்திலும் விவாதிக்கப்படும் ஓர் முக்கிய விடையம் "குற்றம் புரியும் வெளிநாட்டவர்களை நாம் என்ன செய்வது? நாட்டைவிட்டு வெளியேற்றுவதா? அல்லது நோர்வே சட்ட வரைமுறைக்குள் தண்டிப்பதா? என்பதே ஆகும். இவ்விவாதத்தில் "குற்றம் புரிபவர்களை (அதுவும் மூன்றாம் உலக கறுத்த வெளிநாட்டவர்களை) உடனடியாக பாரபட்சமின்றி வெளியேற்ற வேண்டும்" என வலது சாரிக் கட்சிகளும், பாசிச, நாசிச, நிறவாதக் கட்சிகள், அமைப்புகள் என்பன கோரிநிற்கின்றன. ஆனால் இடது சாரிகளும், மனிதாபிமானிகளும், பாசிச, நாசிச, நிறவாத எதிர்ப்பு அமைப்புகள் "நோர்வேக்குள் இருக்கும் அனைவரும் சட்டத்தின் முன்னிலையில் சமமானவர்கள். குற்றம் என்பது சமூக அரசியல் நிகழ்வில் ஏற்படும் விளைவு. அதற்கு தனிமனிதன், அவன் எவனாக இருப்பினும் பொறுப்பாளியாக முடியாது. ஆகவே நோர்வே சட்டத்திற்கிணங்க குற்றம் புரிபவர்களை தண்டிக்க வேண்டும்" எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன் அடிப்படையில் திரு சச்சி மயில்வாகனத்தின் கருத்தானது வலது சாரிகளினதும், நாசி, நிறவெறியர்களின்தும் கருத்தை ஒத்துள்ளது. இனவெறி, நிறவெறி, சாதிவெறி என்பன ஒரே பாதிப்பை உண்டு பண்ணும் சிந்தனைகள் தான். இவை வலதுசாரி அரசியலில் சர்வசாதாரணமாகும். திரு சச்சி மயில்வாகனமும், அவர் அமைப்பான நோர்வேஜியர் தமிழ்ர் இணைவுகூடமும் நிறவெறி, இனவெறி கொண்ட வலதுசாரி பாசிகளின் கருத்தைக் கொண்டிருப்பது ஆச்சரியப்படக் கூடியதொன்றல்ல.

அறுபதுகளின் இறுதியில் நோர்வேக்கு வந்த சச்சி மயில்வாகனமும், மாணவர் பார்வையிலும், அகதிகளாகவும் எண்பதுகளின் நடுப்பகுதியில் நோர்வேக்கு வந்து இன்று நோர்வேஜியப் பிரஜைகளாக, சிவப்புப் பாஸ்போட் வைத்திருக்கும் நோர்வேஜியர் தமிழர் இணைவுகூடத் தலைமையானது சிறிது கூட சிந்திக்காது பத்திரிகை அறிக்கை விட்டுள்ளது. இவர்களின் அறிக்கையினால் பாதிக்கப்படுபவர்கள் யாரெனில் உண்மையில் அரசியல் காரணங்களாலும், யுத்தத்தாலும் மனோநிலை பாதிக்கப்பட்டு, 90களில் நோர்வேக்கு அகதியாக குடியேறியவர்களே. அதுமட்டுமல்லாது மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த அகதிகளாக குடியேறியவர்களும், மற்றும் வலது சாரிகளுக்கும், நிறவேறிக்கு எதிராக போரிடும் இடது சாரிகளும் மனிதாபிமானிகளுமே.

மேற்படி பத்திரிகைப் பேட்டியில் நோர்வேஜியர் தமிழ்ர் இணைவுகூடத்தின் தலைவர் திரு ஐவன் இராசநாயகம் இவ்வாறு குறிப்பிட்டார்:- மூன்று வருடங்களாக மேற்படிக் குழுவை, பலதடவைகள் குற்றச் செயல்களுக்காக பொலிசார் கைது செய்த போதிலும் சில மணி நேரத்தின் பின் பொலிஸ் விடுதலை செய்து விட்டது. இதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. பொலிசார் இவர்களை கடுமையான முறைகளைப் பாவித்து ஒடுக்குவதுடன் இந்த சட்ட விரோதிகளை சிறையில் நீண்ட நாட்கள் உள்ளே வைக்கும் வரை இவர்களின் பிரச்சனையைக் கையாள வேண்டும்." மேலும் மேற்படிப் பத்திரிகைச் செய்தியில் குற்றவாளிகளை கடுமையாகத் தண்டிப்பதற்கு நோர்வேஜியர் தமிழ்ர் இணைவுகூடம் முற்று முழுதாக உடன்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நோர்வேஜிய தமிழர்களிடமும், திரு ஐவன் இராசநாயகத்திடமும் சில கேள்விகள்.

* குற்றச் செயல் ஏன் சமூகத்தில் நடைபெறுகின்றது? * குற்றம் புரிவது அல்லது சமூகவிரோதச் செயலுக்கு தனிமனிதனே அல்லது சிறு குழுவோ முற்று முழுதான காரணமாக, பொறுப்பாக முடியுமா? * குற்றம் புரிபவனுக்குரிய தண்டனை சிறையில் அடைத்து கடுமையாகத் தண்டிப்பது அல்லது நாடு கடத்துவதுதான் ஒரே வழிமுறையா?

இலங்கையில் - தமிழ் இயக்கங்கள் பசிக்காக மரவள்ளிக் கிழங்கு புடிங்கியவன், இளநீர் பிடுங்கியவன் போன்ற சிறு செயல்கள் புரிந்தவர்களை சந்தியில் வைத்து கொலை செய்தார்கள், சமூக விரோதி என்று முத்திரையும் குத்தினார்கள். இந்த மரவள்ளிக் கிழங்கும் இளநீரும் யார், தோட்டத்தில் யார் "களவு" எடுத்தார்? பணக்காரன் தோட்டத்தில் பசித்தவன் "களவு" எடுத்தான். இயக்கங்கள் பணக்காரர்களின் கைக்கூலியாகி பசித்தவனைக் கொலை செய்தது. சோசலிசம், கம்யூனிசம், தமிழீழம், மயிர் மண்ணாங்கட்டி கதைத்துக் கொண்டு பசித்தவர்களை கொலை செய்தனர்.

நோர்வேயில், நோர்வேயை ஆளும் வர்க்கத்திற்கு துணை போவதன் ஊடாக யுத்தத்தில் பாதிக்கப்பட்டு, குடும்பப் பிரச்சனை, பொருளாதாரப் பிரச்சனை, உணர்வுகளுக்கு இடையிலான போராட்டம் என பன்முக பாதிப்பை எதிர் கொள்ளும் பாதிக்கப்பட்ட இளைஞ்ஞர்களையும் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களையும் மேலும் ஒடுக்க துணை போயுள்ளது நோர்வேஜியர் தமிழ்ர் இணைவுகூடம்.

"சுவடுகள்" எனும் "முற்போக்கு" சஞ்சிகையில் அங்கம் வகிக்கும் பல நபர்கள் இப்பிரச்சனையில் தலையிட்டுள்ளனர் என்பது கவலைக்கு இடமானதோர் விடையம். சமூகப்பொறுப்புள்ள சஞ்சிகையாக காட்டிக் கொள்ளும் சுவடுகள் இவ்வாறு இரட்டைவேடம் போடுவது ஏற்கனவே பாதிக்கப்பட்டு திண்டாடும் தமிழ் சமூகத்தை அழிவிற்கு இட்டுச் செல்லும்.

சுவடுகள் மறுக்கலாம் தாம் இதில் உடன்பாடில்லை என்று. எல்லாம் நீர் அறிவீர்

"இறுதியாக தனிமனிதன் மாறவேண்டும், குற்றம் குறைய வேண்டும் எனின் இச் சமூக அமைப்பு மாற்றப்பட வேண்டும். இந்த புலம் பெயர்ந்த சமூக அமைப்பிலுள்ள பாதிக்கப்பட்ட, பரிதாபத்திற்குரிய தனிமனிதனையோ அல்லது சிறு குழுவையோ திணித்து ஒடுக்க முனைவது முரண்பாடுகளை முற்ற வைப்பதற்கே இட்டுச் செல்லும். முரண்பாட்டால், சமூக நலனின் அடிப்படையில் மனித சிந்தனை வளர்க்கப்பட வேண்டும். நிதானமாக திட்டமிட்டு சமூக மாற்றத்திற்கு போராட வேண்டும். அதைவிடுத்து சிறையில் அடைப்பதும், நாடுகடத்துவதும் தீர்வாகாது.

> இக்கட்டுரையானது புலம் பெயர்ந்த நாடுகளில் தமது இயந்திர வாழ்கையை தொடரமுடியாமல் தத்தழித்தவண்ணம் உள்ள எம்மவர்களைக் தமது நலனுக்காக ஆள்வோருக்கு காட்டிக்கொடுத்த வண்ணம் இருக்கும் மேல்தட்டு வர்க்கத்தினரின் செயல்களை அம்பலப்படுத்துகின்றது. மேலும் குற்றம் புரிபவர்களை வெளியேற்ற வேண்டும் என்பதை நாமும் வண்மையாகக் கண்டிக்கின்றோம்.
>
> -சுமைகள்-

# ஐரோப்பாவில் தொடரும் ஒடுக்குமுறை

## இஸ்லாமிய மாணவர்கள் மீது பிரான்ஸ் அரசின் பயங்கரவாதம்

-ச.சிவானந்தம் (PARIS)-

சிறுபாண்மை தேசிய இனங்கள் மீதான ஒடுக்க முறை ஐரோப்பாவிலும் தொடர்கிறது. அல்ஜீரியாவில், பிரான்ஸ் நாட்டு பிரஜைகள் சிலர் கொல்லப் பட்டதையடுத்து, பிரான்சில் வசிக்கும் அனைத்து இன முஸ்லீம் மக்கள் மீதும், மற்றும் குடியேறியோர் மீதும் தனது ஐரோப்பிய மேலாதிக்கத்தை, பாசிசக் கரங்களைக் கொண்டு ஒடுக்கு முறையை இறுக்கியது பிரான்ஸ்அரசு. கடை, தெருக்கள், வேலைத்தலங்களில் ஐரோப்பிய சாயலற்ற அனைவரும் குற்றத்தடுப்புப் போலிசாராலும், ரகசிய பொலிசாராலும் சோதனை இடப்பட்டனர். பலர் நடு இரவு வேளையில் பொலிசாரால் வீட்டில் வைத்து தட்டி எழுப்பப்பட்டு விசாரிக்கப்பட்டனர். இதுமட்டுமல்லாது முஸ்லீம் கருத்தியல் அடிப்படை வாதிகளுடனும், மற்றும் பயங்கர வாத அமைப்புக்களுடன் தொடர்புடையோர் என சந்தேகப்பட்ட பலர், பிரான்சில் பிரபலமான இருட்டறைப் பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த வருடம் ஆவணி 3இல் அல்ஜீரியாவில் 5 பிரான்ஸ் நாட்டுப் பிரஜைகள், அல்ஜீரிய இஸ்லாமிய பாதுகாப்பு முண்ணனி (FIS) இனரால் கொல்லப் பட்டதை அடுத்து பிரான்ஸில் தொடர்ந்து வரும் முஸ்லீம் மற்றும் சிறுபாண்மை இனங்கள் மீதான கொடுரங்களுக்கு பிரான்ஸ் அரசு சொல்லும் காரணம் என்னவெனில், இஸ்லாமிய பயங்கர வாதிகளிடமிருந்து நாட்டைக் காப்பது என்பதாகும்.

இது அனைத்தும் ஒரு புறமிருக்க, இப்போ பிரான்ஸ் அரசு, முஸ்லீம் சிறுவர்கள், சிறுமிகள் பாடசாலை மாணவி, மாணவர் மீதும் தனது ஈனக்கரங்களை படரவிட்டுள்ளது. புதிய ஒடுக்கு முறை வடிவமாக பிரான்ஸ் பாசிச அரசு பாடசாலை செல்லும் முஸ்லீம் மாணவிகள் முக்காடு போடக்கூடாது என்றும், ஆண் மானவர்கள் தலையில் குல்லாய் போடக்கூடாது என்றும் தடை விதித்துள்ளது. இத்தடையை யாராவது மீறினால் உடனடியாக பாடசாலையை விட்டு வெளியேற்றுவதுடன் அரச கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் உரிமையையும் இழப்பர். இதனை அடுத்து தற்போது முஸ்லீம் பாடசாலை மாணவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். தற்போது, முன்பு முக்காடு அணியாத பல முஸ்லீம் மாணவிகள் முக்காடிட்டுக் கொண்டு பாடசாலை செல்லத்தொடங்கி உள்ளனர். இதனால் சினமடைந்த பாடசாலை முதல்வர்கள் முக்காடிட்ட பல மாணவிகளை வெளியேற்றி உள்ளனர். பரீஸ் நகருக்கு அருகில் உள்ள ஆயுவேநுளு டுயு துழுடுஐநு என்ற இடத்தில் உள்ள ஒரு பாடசாலையில் மட்டும் 17 மாணவிகள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மத சின்னங்களுக்க தடை விதிப்பிற்கு எதிராக ஆரம்பித்த போராட்டம் இன்று, சிறுபாண்மை இன உரிமையையும் அதன் தனித்துவத்தையும் பாதிப்பதாக ஒடுக்கப்பட்டோரால் உணரப்பட்டுள்ளது. சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி என்பது போல் பிரான்ஸ் அரசின் இச்செயற்பாடானது பல குடியேறிய சிறுபாண்மையினரை சிந்திக்க வைத்துள்ளது. (மதிப்பிற்குரிய தமிழ் குடியேறிகளை எந்த அளவு இப்பிரச்சனை பாதித்துள்ளது என்பது இவ்விடத்தில் ஆராயப்பட வேண்டியது.)

ஒடுக்கப்பட்டோரும், இடதுசாரி, கட்சிகளும், முற்போக்குச் சிந்தனை கொண்ட மனிதாபிமானிகளும் இன்று பிரான்ஸ் அரசின் ஒடுக்கு முறைக்க எதிராக பன்முகப் போராட்டம் தொடர்ந்து உள்ளனர். வெறும் மதப்பிரச்சனையாகப் பார்க்கப்படாமல் மனித உரிமைக்காகவும், உலகப் புரிந்துணர்வினதும், தனிமனித உணர்வினதும் அடிப்படைப் பிரச்சனையாகவும் பிரான்ஸ் முஸ்லீம் மக்களால் இனங்காணப்பட்டுள்ளது. பிரான்ஸ் அரசின் ஒடுக்க முறையும், அதற்கு எதிரான போராட்டமும் வளர்த்தெடுக்கப்பட்டு, அனைத்து ஒடுக்குமுறைகளுக்க எதிரான போராட்டமாக வளர்க்கப்பட வேண்டும்

> இன்று பலரின் கண்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒடுக்கு முறை இல்லை என்பது போலக் காட்சியளிக்கின்றது. இக் கட்டுரை மூலம் ஐரோப்பாவிலும் ஒடுக்குமுறைகள் உண்டு என்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. பிரான்ஸில் நடைபெறுவது போல் ஐரோப்பாவில் வாழும் தமிழர்களுக்கும் இந்நிலை ஏற்படுவதற்கு நீண்ட காலம் எடுக்காது. இவற்றைக் கவனத்தில் கொண்டு நாம் இங்குள்ள நேசசக்திகளுடன் அணிதிரள வேண்டும்.
>
> -சுமைகள்-

படிப்பகம்

www.padippakam.com



# நோபல் சமாதானப் பரிசு

1994ம் ஆண்டிற்கான சமாதானப் பரிசுகளை சீமோன் பெரஸ், இற்சாக் ரபீன், யசீர் அரபாத் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். உத்தியோக பூர்வமான அறிவிப்பினைத் தொடர்ந்து மூவரும் பரிசினைப் பெறுவதற்க்கு சம்மதம் தெரிவித்தனர். இப்பரிசினை யசீர் அரபாத்திற்க்கு கொடுப்பதில் முரண்பாடு கொண்ட நோபல் பரிசுக் கொமிட்டி உறுப்பினர் கொரெ கிரிஸ்ரியான்சன் (KAARE KRISTANSAN) கமிட்டிகளை விட்டு விலகினார். இவர் கூறிய காரணமானது அரபாத் ஒரு பயங்கர வாதி, அவர் பயங்கர வாத அரசியல் நடத்துவது என்பதே. இவர் தீவிர இஸ்ரேல் ஆதரவாளர். கடவுள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டார் எனப் பெருமைப்படுவார்.

யார் பயங்கரவாதி? ஒடுக்கப்படும் மக்களுக்காக பாடுபடுபவர் பயங்கர வாதி என்றால் மக்களை ஒடுக்கும் ஆட்சியாளர்களை என்னவென்பது. ஆண்டாண்டு காலமாக மக்களை ஒடுக்கி அதிலேயே ருசி கண்டவர்கள் இஸ்ரேலிய ஆட்சியாளர்கள். "சப்ரா", "சதிலா" ஆகிய அகதி முகாமிலே இருந்த குழந்தைகள் முதல் முதியவர் வரை கொண்று குவித்தார்கள்.

இவ் ஆட்சியாளர்களால் கொல்லப்பட்டவர்கள் தொகையோ 3000-5000 இடைப்பட்டது. இது பயங்கர வாதம் இல்லையா? இவ்விடையம் இக் கிறிஸ்துவின் சீடனுக்குத் தெரியாமல் விட்டது ஆச்சரியம் இல்லைத் தான். கொரெ, இவர் முன்பு கிறிஸ்தவ மக்கள் கட்சியை (KRF) சேர்ந்தவர். இவர்கள் தானே மீட்பவர் வரும் வரை காத்துக் கொண்டிருப்பவர்கள். (கடவுள் இஸ்ரேலியருக்கு நாடு வழங்குவதாக பைபிலில் வாக்களித்திருந்தார்)

நாம் இந்த நோபல் பரிசு கொடுக்கப்படும் முறைகளை உற்று நோக்காமல் விட்டுவிடுகிறோம். இதற்கு ஒரு பொதுத்தன்மை காணப்படுகிறது. இப் பொதுத் தன்மையை இனம் காண்பதற்கும், ஏற்றுக் கொள்வதற்கும் தயக்கம் காட்டுகிறோம். காரணம் இது மிகவும் நுண்ணிய தன்மையைக் கொண்டதேயாகும். அதாவது இவர்கள் பரிசு பெறுபவர்களைத் தெரிவு செய்யும் பொது எவர் மக்களைக் கவரும் தன்மையைக் கொண்டவரா?, அவரின் கவர்ச்சி எவ்வளவு தூரம் மக்களிடத்தில் எடுபடுமா?. அவரின் மூலமாக மேற்கத்தைய நலனை அந்தந்த நாடுகளில் பரதிபலிக்கச் முடியுமா? என்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். இதனை இன்னும் விரிவாகப் பார்ப்போமானால் ஏகாதிபத்தியங்கள் மூன்றாம் உலக நாடுகளில் தமக்கு இசைவான சக்திகளை உருவாக்க வேண்டிய தேவை நிறையவே உண்டு. மேற்குலக நாடுகள் மனித உரிமையில் அதிக அக்கறையுடையவர்களாகக் காட்டி நடிப்பதன் காரணம் தமது நலனின் பாதுகாப்பதற்கே ஆகும். மேற்கு நாடுகள் தமது மூலதனத்தை குவிக்கும் நோக்குடன் கூட்டமைப்பை நோக்கி நகர்கின்றனர். அதே வேளை மூன்றாம் உலக நாடுகளை சிறு நாடுகளாகப் பிரிந்து போவதை மறைமுகமாக ஆதரித்துக் கொண்டும், சீரழிந்த ஆட்சியாளர்களை ஆட்சியில் தொடர்ந்தும் இருக்கவைத்துக் கொண்டும், இவ் இடைக்காலங்களை சாதகமாகப் பயன்படுத்தி கொண்டு தமது எவலாளர்களை உருவாக்குவதில் தொலை நோக்குடன் செயற்படுகின்றனர். இதற்கு நல்ல உதாரணம் நெல்சன் மண்டேலாவாகும். தென் ஆபிரிக்காவின் கதவுகளை திறந்து கறுப்பின மக்களை சுரண்ட வைக்கக் கூடியவர்களை உருவாக்குவதில் நெல்சன் மண்டேலாவால் வெற்றி பெற்றனர்.

இதிலிரிந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம் என்னவெனில் பணக்கார நாடுகளிக் ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் பின்னால் அவர்கள் தமது நலனைப் பாதுகாத்துக் கொள்கிறார்கள் என்பதேயாகும். பிச்சைக்கார நாட்டைச் சேர்ந்தவர்களாகிய நாம் இவர்கள் கொடுக்கும் பரிசுகளில் மதிமயங்கி தொடர்ந்தும் ஏமாளிகளாக இருக்கப் போகிறோமா?

இறுதியாக கொரெ கிரிஸ்ரியான்சன் நோபல் கொமிட்டிக்கும் இடையேயான முரண்பாடு என்பது எவ்விதத்திலும் வேறுபாடுடையதல்ல.

பல வருடங்களுக்கு முன்பு இவர்களுடைய போலித் தன்மையை உணர்ந்த போல் சாத்திரே இலக்கியத்திற்காகக் கிடைத்த நோபல் பரிசினை நிராகரித்தார். இவரைப் போன்ற தொழிலாளர் நலனின் மீது அக்கறையுடைய விரல்விட்டு என்னக் கூடிய அறிஞர்களை வரலாறு எமக்குதந்துள்ளது.

*1 பக்க தொடர்....*

முஸ்லீம் காங்கிரஸ் ஆகியவை சந்திரிக்காவை ஆதரித்தனர். இக்கட்சிகள் எல்லாம் தமக்கான கொள்கைகளில் உறுதியற்றனவாகவும் காற்றடிக்கும் திசைக்கு அசைவனவாகவும் இருக்கின்றன. அதேவேளை தமது கொள்கைகளை வலியுறுத்தும் இறைமை அற்றனவாகவும் தமது இருப்பை மையமாகக் கொண்டு இயங்குகின்றன. பேச்சுவார்த்தை தொடர்பாக எடுக்கப்படும் முயற்சியானது இருபகுதியினரும் மனந்திறந்து உண்மையாகவே சமாதனத்தில் அக்கறை கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்கள் ஆயின் அவை வரவேற்கப்பட வேண்டியவையாகும். ஏனெனில் மக்களுக்கு இடைக்காலத் தீர்வென்பது அவசியமானதாகும். அதாவது மக்கள் நீண்ட கடின பயணத்தை மேற் கொண்டுள்ளனர். தமிழ் மக்கள், முஸ்லீம் மக்கள், மலையக மக்கள் ஏன் சிங்கள மக்கள் அந்தப் பயணத்தில் வெற்றி அடைய வேண்டுமாயின் இளைப்பாறுதல் என்பது அவசியமானதென்றாகும். ஆனால் சந்திரிக்கா கூறிய படி அரசாங்கத்தை விட இராணுவம் கூடுதலான அதிகாரத்தை வைத்திருக்கின்றது என்பது உண்மையே. இவை மாத்திரம் அல்ல அனைத்து அரச நிறுவனங்களிலும், அரசியல் அமைப்புச் சட்டத்திலும் இனவாதம் என்பது புரையோடிப்போய் உள்ளது. இன் நிலையில் சிறுபான்மை இனத்திற்கான உரிமை வழங்குவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். இனப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டுமாயின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படல் வேண்டும். சந்திரிக்கா ஜனாதிபதி ஆன பின் தாயார் பிரதமர் ஆனார். இடைநிறுத்தப்பட்டிருந்த சமாதானப் பேச்சுவார்த்தை தொடரும் முகமாக தனது அரசியல் நலனுக் கேற்ற புதிய இராணுவ அதிகாரிகளை மாற்றியும், தேசிய அபிவிருத்திச் சபையினையும் தனது தலைமையின் கீழ் உருவாக்கியுள்ளார். இராணுவ அதிகாரிகளை மாற்றியதற்குக் காரணம் சந்திரிக்கா ஏற்கனவே கூறியது போல இராணுவத் தலைமையானது சமாதானத்தை விட யுத்தத்தையே விரும்பியதேயாகும்.

# உலகவலம்...

## லாபத்தை முதன்மைப்படுத்தினால்......

லாபத்தில் இயங்காத தொழிற் சங்கங்கள் மூடப்படுகின்றன. இதன் காரணமாக 2000ம் ஆண்டளவில் 270 மில்லியன் தொழிலாளர்கள் வேலையை இழக்க நேரிடும். கோங்கொங் வேலைத் திணைக்களத்தால் கணிப்பிடப்பட்ட ரகசிய அறிக்கையானது கொங்கொங் பத்திரிகையான மிங்குபோ (Ming Pao) வில் பிரசுரமாகியது.

## தொடரும் போராட்டங்கள்..............

12.11 அன்று பத்துலட்சம் மக்கள் சில்வியோ பலஸ்கோனி தலைமையிலான இத்தாலிய அரசின் 1995 ஆண்டுக்கான புதிய வரவு செலவுத் திட்டத்தினை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். சிவப்புக் கொடிகளுடனும், ஏன் சுத்தியலும் அரிவாளுடனும் கூடிய கொடிகூட ஆர்ப்பாட்டக் காரர்கள் தாங்கிச் சென்றனர். இவ்வார்ப்பாட்டமானது இத்தாலியின் மிகப் பெரிய தொழிற்சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது. இது 1979 ஆண்டின் பின் இடம்பெற்ற மிகப் பெரிய அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டமாகும். இதேவேளை அரசாங்கம் நோயாளர்களுக்கும் ஓய்வு பெற்றோருக்குமான பொருளாதார உதவியை குறைக்கப்படும் என அறிவித்துள்ளது. கடந்த மாதம் 3ழ லட்சம் தொழிலாளர்கள் நான்கு மணித்தியால அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

இந்த உலகம் பொது உடமைத் தத்துவத்திற்கு சாவுமணி அடித்துவிட்டது என கூக்குரல் இட்டாலும் அது பொய் என மீண்டும் மீண்டும் நிருபிக்கின்றது. எங்கு தொழிலாளர்கள், எங்கு போராட்டத்தில் குதிக்கிறார்களோ அங்கு சமூக மாற்றத்திற்கான போராட்டம் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது என்பதற்கு இதைவிட சாட்சிகள் தேவையோ! ஏன் தற்போது மேற்கத்தைய நாடுகளில் பொதுவுடமை வாதிகள் இல்லை என்று ஒரு சில 'தமிழ் புரட்சிவாதிகளும்', 'முறபோக்குச்' சஞ்சிகைகளும் கூறுகின்றனர்.

## பலஸ்தீனத்தில் நடப்பது என்ன?

11.11 அன்று 17 வயதுடைய போராளி தன்னுடம்பில் வெடிகுண்டை பொரித்திக்கொண்டு காஸாவில் யூதக் குடியிருப்பில் அமைந்துள்ள இராணுவ காவல் அரணை நோக்கி சைக்கிளைச் செலுத்தி தன்னுயிரை தன் மண்ணுக்காக அர்ப்பணித்துள்ளார். இச்சம்பவத்தின் போது நான்கு படையினர் கொல்லப்பட்டும், பன்னிருவர் காயம் அடைந்தனர். இதனை அரபாத் கண்டித்தும், புலனாய்வு செய்யவும் பணித்துள்ளார். இதன் தொடர்ச்சியாக 12.11 அன்று பலஸ்தீன பொலிசார் 115 ஜிகாத் உறுப்பினர்களை கைது செய்துள்ளனர். இக்கைதானது பாதுகாப்புச் சபையினதும் பலஸ்தீன-இஸ்ரேலிய ஒத்துழைப்புக் கமிட்டியின் அறிவுறுத்தலின் கீழ் நடைபெற்றுள்ளது. ஜிகாத்தின் தளப்பிரதான சூத்திரதாரி என கருதப்படும் சேக் (Sheik Abdullah Shami) என்பவரை விசாரித்ததில் 2.11 அன்று கொல்லப்பட்ட தமது தலைவரான ஹனி (Hani Abed) மரணத்திற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே இத்தாக்குதல் நடைபெற்றதாக விசாரணையில் கூறியுள்ளார்.

பி.எல்.ஓவின் செயல்பாடானது பிழையான கருத்தைக் கொண்டுள்ள சக்திகளை மென்மேலும் மக்களிடத்தில் இருந்து அனுதாபம் ஏற்படுத்தவே வழிசமைக்கும். பி.எல்.ஓவானது ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் தந்திரத்திற்கு பலியாகி போகுமாஎன்பதை வரலாறுதான் தீர்மானிக்கும். இடைக்காலத் தீர்வென்றினை நோர்வே அரசானது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆசிர்வாதத்துடன் நிறைவேற்றியது என்பது எல்லோரும் அறிந்ததே. இத்தீர்வானது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கனவான புதிய உலக ஒழுங்கு திட்டத்தினை நிறைவேற்றும் முகமாகவே இடம்பெற்றது என்பது குறிப்பிடத் தக்கது.

படிப்பகம்